www.tamilarangam.net

March 2011

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

« Feb

- **இன்றுவரை…**
-
- பதிவுகள் :**12,077**
  கருத்துக்கள் :**26,675**
  வகைகள் :**119**
  பார்த்தவர்கள் : பார்த்தவர்க
-
-
- **தேசம்நெற்**

  **தேசம்**

  **--தேசம்நெற் ஆசிரியர் குழு**

**Feb**

**27**

# அகிலன் - செல்வன் படுகொலை! தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் - எனது சாட்சியம் - பகுதி 3 : ஜெ ஜென்னி

≡ Category: கட்டுரைகள்/ஆய்வுகள், ஜென்னி ஜெ | ≅

*தேசம்நெற் இணையத்தில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின்*


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

*வரலாற்றுத் தடங்களைப் பதியும் எனது முயற்சிக்கு ஆதரவாகவும் எதிராகவும் பல விமர்சனங்கள் வந்த வண்ணம் உள்ளது. புதிய கழக உறுப்பினர்கள் பலருக்கு கழகத்தின் வரலாற்றுப் பின்னணி தெரியாததால், அவர்கள் மிக ஆத்திரம் கொள்வதுவும் எனது பதிவுகளை நிறுத்த பலவிதத்திலும் முற்பட்டுக் கொண்டிருப்பதுவும் நான் அறிந்ததே.*

*இதற்கு ஒரு முற்று வைக்கும் முகமாக கழகத்தின் தலைவர் திரு. சித்தார்த்தன் அவர்களுடன் (18-02-11) ஒரு மணிநேரத்திற்கும் அதிகமாக உரையாடினேன். கடந்த கால கழகத்தின் செயற்பாடுகளில் எனது பாத்திரங்களையும் பங்களிப்புக்களையும் நாட்டிலுள்ள கழக தலைவர் உட்பட பல பழைய தோழர்கள் அறிவார்கள். எமது கடைசி காலத்திலாவது சுயவிமர்சனங்களோடு நாம் வெளிப்பட வேண்டும் என்பது எனது நிலைப்பாடு. அதற்குத் தடைபோடுவது ஆரோக்கியமானது அல்ல. யாரோ சிலர் தங்கள் பற்றிய புதைந்து கிடக்கும் உண்மைகள் வரப்போகின்றதென்று ஆதங்கப்பட்டு தவறான ஊகங்களைப் பரப்புகின்றனர். இவர்களால் இந்தச் செயன்முறையை எதுவும் செய்ய இயலாது.*

*அடுப்படி 'நெருப்பு' ஊதியே பெண்கள் வாழ்கையை ஓட்ட வேண்டும் என்ற பாணியில் சிந்திப்பவர்கள் இங்கு வெளிநாடுகளிலும் இருக்கிறார்கள் என்பதும் அவர்களது சிந்தனையை ஏற்றவும் இணையங்கள் தயாராக இருக்கின்றன என்பதும் வேதனையான உண்மைகள். ரொட்டி சுடவும் தோசை சுடவும் தான் பெண்கள் என்று 'நெருப்பு' உள்ளிருந்து புகையும் இவர்களுக்கு ஒரு பெண் சுயவிமர்சனம் செய்வதைக் கூட ஏற்றுக்கொள்ள முடியவில்லை.*

*கழகத்தின் இந்த வரலாற்று மதிப்பீடு, சுட்காட் மாநிலத்தில் நடந்த கழக மநாட்டு அறிக்கை தேசத்திற்கு அனுப்பப்பட்டு வெளியிடப்பட்டதில் இருந்தே ஆரம்பமானது. எமது கடந்த கால கழக செயற்பாடுகளின் நிமித்தம் நாமும் இந்த இணைய தளத்தின் களத்திற்குள் இழுக்கப்பட்டுள்ளோம். இதுவரை மற்றைய சில இணையதளங்களில் நாம் சார்ந்ததுவும் கழகம் சார்ந்ததுவுமான விடயங்கள் எல்லோரின் தியாகங்களுக்கு மேலாக கொச்சைப்படுத்தலாக கேவலமாக விமர்சிக்கப்பட்டதால், எல்லோருக்குமாக பாராபட்சமில்லாமல் திறந்து விடப்பட்டிருக்கும் தேசம்நெற் இணையத் தளத்தில் நான் எனது பதிவுகளை முன்வைத்து உள்ளேன்.*

*இதுபற்றி தலைவர் சித்தார்த்தர் அவர்களுடன் உரையாடியபோது, அவர் எமது வரலாற்றுப் பதிவு முயற்சியை மிக வரவேற்றார். மேலும் அவர் குறிப்பிடும் போது ''ஜென்னி கண்டிப்பாக உங்களைப் போன்றோர் நல்ல முயற்சியில் இறங்கி உள்ளீர்கள் வரவேற்கப்பட வேண்டியதே. இதற்கான அத்தனை தகுதியும் உமக்கு உள்ளது. இந்த நல்ல பணியை தொடருங்கள். நான் கழகத்தின் முற்பகுதியிலோ, மத்திய குழுவிலோ அதன் செயற்பாடுகளிலோ சம்பந்தப்படாதவர். அன்றைய கழகத்தில் ஒரு வெளிநாட்டு கழக ஆதரவாளராகத்தான் இருந்தேன்'' எனக் கூறித் தனது அன்றைய நிலையைத் தெளிவுபடுத்தினார்.*

*மேலும் நான் அன்றைய கழக கடைசிக் காலத்தில் செயலதிபர் உமாமகேஸ்வரன் அவர்களை சுயவிமர்சனத்தை பகிரங்கமாக முன்வைக்கும்படி குறிப்பிட்ட விடயத்தையும், அதேபோல் 1990ற்கு பின் என நினைக்கின்றேன் தோழர் சித்தா சுவிசில் நிற்கும்போது என்னை தொலைபேசியின் மூலம் கழகத்தில் இணைந்து வேலை செய்யும்படி கேட்டபோதும் அன்றும் அதே போன்றே கழகம் முழு சுயவிமர்சனம் செய்யும் போது நாம் கழகத்தின் செயற்பாடுகளில் இணைவோம் என்றும் கூறியிருந்ததை தோழரிடம் நினைவுபடுத்திக் கொண்டேன்.*

*காலத்தின் கட்டாயமாக தவிர்க்க முடியாமல் கழகத்தின் கடந்தகால வரலாறு மீளாய்வு செய்யப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டு உள்ளது. இந்த அவசியம் கழகத்துக்கு மட்டுமல்ல அனைத்து விடுதலை இயக்கங்களுக்கும் ஏற்பட்டு உள்ளது. ஆனால் அதனைச் செய்கின்ற பக்குவம் கழகத்தில் உள்ளவர்களுக்கே தற்சமயம் உள்ளதாக நான் நம்புகிறேன். அதற்கு கழகம் அன்று வழங்கிய அரசியல் தெளிவும் ஒரு காரணமாக இருக்கலாம். ஆனால் பிற்காலங்களில் தவறான சக்திகளின் கைகளில் கழகம் சிதைந்துவிட்டது.*

*இதனை தலைவர் சித்தார்த்தர் அவர்கள் போன்று வெளிநாட்டிலுள்ள சில கழகத்தவர்களும் புரிந்துகொண்டு ஆரோக்கியமாக பார்த்தால் தேவையற்ற குழப்பங்கள், சந்தேகங்கள் வராது. வரலாற்றை மீளாய்வு செய்வதும் மீள் மதிப்பீடு செய்வதும் தவிர்க்க முடியாதது.*

-_-_-_-_-

செல்வன் 1983 பிற்பகுதியில் நெருங்கிய நண்பராக இருந்தவர். எனவே எல்லா விடயங்களையும் அவருடன் கடிதம் மூலம் தொடர்பு கொள்வேன். அது போல் ஜான் மாஸ்ரரின் வெளியேற்றமும் அதில் பாஸ்கரன் போன்றோரும் சென்றதுமான நிகழ்வுகளை எழுதினேன். மேலும் செல்வன், அகிலன் மூதூர் முக்கிய பொறுப்பை மேற்கொண்டு இருந்தும் வடமாகாணத்தில் நடக்கும் எந்த அமைப்பு கூட்டத்திற்கும் இவர்கள் வராததையும் சுட்டிக்காட்டி அடுத்தடுத்த கூட்டத்திற்காவது வரச் சொல்லியும் அறிவிப்பேன்.

இந்த காலகட்டங்களில் சிவராம் என்பவர் அசோக் அல்லது ஈஸ்வரன் மூலமாக அறிமுகமானார் என நினைக்கின்றேன். எமது தள அரசியல் கழத்திற்குள் பிரவேசித்தார். சிவராம் முயற்சியில் சில அரசியல் வகுப்புக்களும், சில பாசறைகளும் நடந்தன. இவை அதிகமாக கிளிநொச்சி முல்லைத்தீவு பகுதிகளிலேயே நடைபெறும். இதற்கான ஒழுங்குகளை கிளி மாஸ்ரர், மனோ மாஸ்ரர் மேற்கொள்வார்கள். இந்த பெண்களுக்கான வகுப்புக்கள் நடக்கும் நேரத்தில் நான் அதிகமாக மகளிர் எல்லோருக்கும் பின்னாலேயே இருப்பேன்.

(சிவராம் - 5வது ஆண்டு நினைவு: இலங்கையின் ஊடகத்துறையின் தற்போதைய நிலை : த ஜெயபாலன்) ஏற்கனவே கழகம் குழம்பியதான சூழலில் சிவராம் யார்? இவர் பின்னணி என்ன? எனக்கு சரியாக கணிக்க முடியாததால் இவரின் அரசியல் நகர்வையும் கவனிக்க வேண்டிய சூழல் இருந்தது. ஏனெனில் கழக மகளீரமைப்பு அன்றைய காலகட்டத்தில் ஒரு தேசிய விடுதலைக்கூடாக பெண் விடுதலையை முன்னெடுத்தது. இதில் பெண் விடுதலை உட்பட எந்தச் சமூக முரண்பாட்டையும் தனியே பிரித்து பார்த்து அரசியலை செயற்படுத்தவில்லை. எனவே மகளீருக்கான அரசியல் வகுப்புக்களும் தனிப்பட்ட பெண் விடுதலையை கூர்மைப்படுத்தும் அரசியலை முன்னெடுப்பதாகச் சொல்லி சமூக மட்டத்திலான குழப்பங்களை உண்டு பண்ண அனுமதிக்க முடியாது என்ற எண்ணம் கழகத்திடமும் என்னிடமும் இருந்தது.

இந்நிலையில் சிவராமுடன் சில கலந்துரையாடல்களை மேற்கொண்ட போது, அவருடன் சில முரண்பாடுகளை என்னால் உணர முடிந்தது. எப்போதும் ஒரு சூட்சுமமான பேச்சுடன்தான் திரிவார். மேலும் அவரின் நடை, உடை, பாவனைகள் உட்பட்ட செயற்பாடுகள் மகளீர் மத்தியில் சில விமர்சனங்களையும் ஏற்படுத்தியது. இந்த எனது விமர்சனத்தை அன்று எங்களுடன் பங்காற்றிய கிளிமாஸ்ரரே வைத்திருந்தார். எனவே நானும் சிவராம் விடயத்தில் கவனம் எடுத்தேன்.
திருமலை மூதூரிற்கு மகளீரமைப்பு பொறுப்பாளராயிருந்த சக்தி எமது மகளீர் சந்திப்புக்கு வந்து போவதால், போகும் போது செல்வனுக்கான கடிதங்களை அவர் மூலம் பரிமாறிக் கொள்வேன்.

தளத்தில் பல பிரச்சினைகள் இருக்கும் நிலையில் அரசியல் பொறுப்பாளர்கள் செல்வன், அகிலன் மட்டும் இக்கூட்டங்களுக்கு வராமல் இருப்பது பலரிடம் தளத்தில் விமர்சனங்களை கொண்டு வந்திருந்தது. முக்கியமாக ஈஸ்வரன் மத்திய குழுவிலும் கிழக்கு மாகாணப் பொறுப்பாளராகவும் இருப்பதாலும் செல்வன், அகிலன் எதற்கும் தன்னை கேட்டு நடப்பதில்லை எனவும் இவர்களின் தன்னிச்சையான போக்கு தன்னை அவமதிப்பதாகவும், கழககட்டுப்பாட்டில் அவர்கள் உள்ளனரா என்ற சந்தேகத்தைத் தருவதாகவும் தளநிர்வாக கூட்டங்களில் குறிப்பிட்டு இருந்தார். ஈஸ்வரன் என்னுடன் தனிப்படப் பேசும்போதும் கொதிப்புடன் இக்குற்றச் சாட்டுகளை வைத்திருந்தார்.

இதனை நான் செல்வனுக்கு தெளிவுபடுத்தி 'தயவு செய்து உடனடியாக நீர் வவுனியாவிற்கோ, யாழ்ப்பாணத்திற்கோ ஒரு தடவையாவது வந்து செல்லும். உங்களை சந்திக்க நீங்கள் சொல்லுமிடத்திற்கு நான் வருகின்றேன். ஆனால் மட்டக்களப்பு - திருமலை பகுதியிற்கு பாதுகாப்பு கருதி என்னால் வரமுடியாது. எனவே கடைசியாக திருமலை வட்டத்தில் - கழகத்தில் (ஆரம்பத்தில் வந்த திருமலை நண்பர்களிடையே) மிஞ்சி இருக்கும் எம்மைப் போல் ஒரு சிலர் நிறையவே பேசவேண்டி உள்ளது. நான் யாரையும் இங்கு நம்ப முடியாதுள்ளது. எனவே இருவரும் சந்திக்ககூடிய விதத்தில் எனக்கு பதில் அனுப்பும்" எனக் குறிப்பிட்டு சில கடிதங்கள் அனுப்பி இருந்தேன்.

இந்தக் காலகட்டத்தில் தளத்திலும் தளப்பொறுப்பாளர் நேசன் உட்பட்ட சிலரின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

வெளியேற்றங்கள் நடந்தன. நான் பொறுப்பெடுத்து வந்த காலத்தில் இருந்து நேசனுடன் வேலை செய்துள்ளேன். இங்கு இந்த தளங்களில் கருத்து வைப்பதாக அவரவர் அரசியலை களங்கப்படுத்தும் நிலையில் நேசனைப் பற்றி வரும் செய்திகளைப் பற்றி தீர்வாகவே அன்றும் சரி இன்றும் சரி கூறுகின்றேன். நான் தளத்தில் நேசனுடன் செயற்பட்ட காலங்களைப் பொறுத்தளவில் நேசனில் இந்த நிமிடம் வரை நான் எந்தக் குற்றத்தையும் காணவில்லை. தள நிர்வாகக் குழு கூட்டத்தில் என் உட்பட்ட எல்லோருக்கும் வந்த அதிருப்தியே நேசனுக்கும் வந்தது. அதிலும் நேசன் கடும் உழைப்பாளி. அவருக்கே தெரியும் நான் அவரை எப்படி மதித்தேன் என்று. மத்திய குழுவென்று தளத்தில் இருக்கும் ஈஸ்வரன், குமரன் ஆகியோரின் பொறுப்பற்ற பதில் பற்றி நானும் நேசனும் எத்தனையோ தடவை கதைத்து உள்ளோம். இவரது வெளியேற்றம் என்னை மிகவும் பாதித்தது. ஏனெனில் ஒரு நல்ல செயற்பாட்டாளர். வெளியேறுவதற்கான காரணங்களை எமது நிர்வாகக் குழுவில் வைத்திருக்கலாம்.

நேசன் கழகத்தை விட்டு விலகி பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் யாழ்ப்பாணத்தில் தலைமறைவாகி இருந்தார். நேசனின் அதே உடைவுகளுடனும் உணர்வுகளுடனும் தான் நானும் மெண்டிஸ்ம் இருந்தோம். ஆனால் எங்களால் வெளியேற முடியவில்லை. மெண்டிஸ் தள ராணுவத்தையும், திரும்பிப் போக முடியாத கிழக்குப் பயிற்சியாளர்களையும் தனது பொறுப்பில் வைத்திருந்ததும், அதேபோல் தளமகளீரமைப்பு பொறுப்பு என்னிடம் இருந்ததும் அதற்கு முக்கிய காரணம். கிழக்கு மகளீர்கள் என்னுடைய காலத்தில் இருந்து அந்த நிமிடம்வரை எனது நேரடித் தொடர்பில் இருந்தனர். மகளீர் பலர் தமது பாதுகாப்பு கருதி மாறிமாறி மற்றைய மாவட்டங்களில் முழுநேர பங்காளராக ஓடித்திரிந்து வேலை செய்துகொண்டு இருந்தனர். இவர்களை எல்லாம் அந்தரத்தில் விட்டுவிட்டு கழகத்தைவிட்டு வெளியேற முடியவில்லை.

இந்நிலையில் நேசனின் இடத்திற்கு உடனடியாக யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளராக மகளீரமைப்பின் தள நிர்வாகத்தில் இருந்த வனிதா முதல் பெண்ணாக தளநிர்வாகத்தால் தெரிவானார். அதைத் தொடர்ந்து ஒரு தளநிர்வாக கூட்டமும் எல்லா மாவட்ட உறுப்பினர்களுக்கும் அறிவிக்கப்பட்டு நடைபெற்றது. இந்த அழைப்பிற்கு விஷேடமாக நான் செல்வனுக்கு மீண்டும் கடிதத்தை கொடுத்து அனுப்பி இருந்தேன். கண்டிப்பாக வருவார் எனவும் எதிர்பார்த்து இருந்தேன். ஆனால் வரவேயில்லை.

ஆனால் அந்த நிர்வாகக் கூட்டத்திற்கு சிவராம் வந்திருந்தார். இதில் எந்த முக்கிய பொறுப்பும் இல்லாத சிவராம் வருவதை தனிப்பட்ட முறையில் நான் ஈஸ்வரனிடம் ஆட்சேபித்து இருந்தேன். இதற்கு பதிலாக வழக்கம் போல் தனது மத்தியகுழு, கிழக்கு மாகாண பொறுப்பாளர் அதிகாரத்தைக் காட்டினார். இவற்றை எல்லாம் குமரனோ, அசோக்கோ கண்டுகொள்வதில்லை. ஆனால் சிவராமை கிழக்கு மாகாணத்திற்குள் ஏதாவது ஒரு பொறுப்பில் போட ஈஸ்வரன் முயற்சித்துக் கொண்டு இருப்பதை நான் பின்நாளில் தான் அறிந்தேன். இதற்கு ஏற்றாற்போல் செல்வனும், அகிலனும் எல்லா நிர்வாகக்குழு கூட்டத்தையும் நிராகரித்தது சாதகமாக இருந்தது.

இந்நிலையில் உரும்பிராயில் ஒருவீட்டில் நான், சிவராம், ஈஸ்வரன் (மற்றும் யார் என்பது ஞாபகம் வரவில்லை.) சந்தித்தோம். அபோது சிவராம் கிழக்கு மாகாணத்திற்கு ஏதோ ஒரு விடயமாக போக புறப்பட்டதாகவும். இவர் போகும் வழியில் செல்வன், அகிலன் கூட்டத்திற்கு வராததால் அவர்களுக்கான கடிதம் ஒன்றை ஈஸ்வரன் சிவராமிடம் கொடுக்க இருந்ததாகவும் அறிந்தேன். அப்போது ஈஸ்வரன் அந்தக் கடிதத்தை தன் கைப்பட கிழக்கு மாகாணத்தின் ராணுவத்திற்கு பொறுப்பாளராக இருந்த பக்தனிற்கு எழுதினார். அதில் இந்த கடிதம் கொண்டுவரும் சிவராமிற்கு செல்வன், அகிலன், அம்பாறை ரகு ஆகியோரை சந்தித்து முடிவெடுக்க ஆவண செய்ய உதவும்படி குறிப்பிட்டு இருந்தார். இந்தக் கடிதத்தின் வாசகம் எனக்கு மிக நெருடலாக இருந்ததால் இக்கடித்தின் வரிகளை சுட்டிக்காட்டினேன். இந்த வாக்குவாதத்தில் சிவராம் தனது வழக்கமான கபடச் சிரிப்புடன் இருக்க, நான் ஈஸ்வரனுக்கு சொன்னேன், "நான் செல்வனுக்கு தனிப்பட்ட நிலையில் கடிதம் அனுப்பியுள்ளேன். அதிகமாக இப்போ கடிதம் கிடைத்திருக்கும் அதிகமாக சக்தியுடன் இங்கு வருவார். நாம் இங்கு வைத்து தளநிலைமைகளை பேசிமுடிவெடுப்போம். அங்கு எதுவும் பேசவேண்டாம்'' என்று. அந்த வாக்குவாதத்தில் ஈஸ்வரன், "நீரா, நானா செல்வனுக்கு மேற்பட்டவர். எனக்கு என்ன செய்ய வேண்டுமென தெரியும். உமது மகளீர் அமைப்பு வேலையை மட்டும் பாரும். எனது வேலையில் தலையிட உமக்கு உரிமையில்லை" என்று வாதிட்டார். இதன்போது

முரண்பட்ட நிலையில் நான் தொடர்ந்து அங்கிருக்கவில்லை. எனினும் அதிகமாக நான் கடைசிக் கடிதத்தில் செல்வனுக்கு விடயங்களை விபரமாக எழுதியதால் எப்படியும் இங்கு வந்து சேர்வார் என்ற நம்பிக்கையில் காத்திருந்தேன்.

ஆயினும் சில நாட்களின் பின் சில வதந்திகளாகவும் செய்திகளாகவும் ஒரு தகவல் கிடைக்கப்பெற்றது. அதாவது செல்வன், அகிலன் மூதூரிலிருந்து கடத்தப்பட்டு பின்தளத்திற்கு கொண்டு செல்லப்பட்டதாக. உடனேயே நான் குமரன், அசோக், ஈஸ்வரனிடம் என்ன நடந்ததென கேட்க, " இதுபற்றி எதுவுமே தெரியாது" என்றனர். அப்போது நான் ஈஸ்வரனிடம், "கடிதம் கொண்டு சென்ற சிவராம் எங்கே? எப்படி? இது சாத்தியப்பபடும்" எனக் கேட்டேன். நான் மிகக் குழம்பிய நிலையில் இருந்த வேளையில், மூதூரின் எமது மகளீர் பொறுப்பாளர் சக்தி அங்கிருந்து வந்திருந்தார். அவர் கூறுகையில் "நானும் செல்வனும் தங்கி இருந்த வீட்டிற்கு சிலர் வந்தனர். அவர்கள் வீட்டை முற்றுகையிட்டு சோதனை செய்து சில கடிதங்கள், ஆவணங்களைக் கைப்பற்றி என்னையும் விசாரித்து விட்டு செல்வனை கூட்டிச் சென்றார்கள். என்னை உடனே யாருக்கும் சொல்லாமல் இவ்விடத்தை விட்டு போகச் சொல்லி ஒருவர் மூலம் என்னை இங்கு அனுப்பி வைத்தார்கள் என்றும் குறிப்பிட்டார்.

சக்தியிடம் விபரத்தை கேட்டறிந்து விட்டு குப்பிளானிலுள்ள அவரின் வீட்டிற்கு திருப்பி அனுப்பினோம். இதனை உடனே தள நிர்வாகத்திடமும் கொண்டு சென்றோம். ஏற்கனவே இருந்த குழப்பத்தில் இது வேறு புதுப்பிரச்சனையென எல்லோரும் குழம்பி நின்றோம். இந்த நேரத்தில் சிவராமும் வந்து சேர்ந்தார். ஆளுக்காள் சிவராமை எல்லோரும் விசாரித்தும் சிவராம் பிடி கொடுக்காத பதிலை சொல்லிக் கொண்டு இருந்தார். தான் உட்பட இன்னும் சிலர் செல்வன் -அகிலனை சந்தித்து பேசவே கூட்டிச் சென்றோம். ஆனால் அவர்கள் இருவரும் வயல் வெளியில் ஓட முற்படுகையில் சுடவேண்டி ஏற்பட்டது" என்றார் சிவராம். அவ்வாறு கூறிவிட்டு அங்குள்ள பதட்டத்தை தணிக்க, "நாம் இவர்கள் இருவரையும் விசாரணைக்கு பின்தளத்திற்கு அனுப்பியுள்ளோம். என அந்தந்த அரசியல் அமைப்பிற்கு அறிவித்துள்ளோம்" என சர்வசாதாரணமாக சொன்னார். இதுபற்றி நாம் எல்லோரும் துடித்துப் போய் நிற்கும் போது ஈஸ்வரனும், சிவராமும் சாதாரணமாக இறுமாப்புடன் நின்றனர்.

இந்த செய்தி வேகமாக எல்லா மட்டத்திலும் பரவ ஆரம்பித்தது. பல சந்திப்புக்களில் கேட்கப்பட்ட போது என்ன காரணம் கொண்டும் இவர்கள் பின்தளத்திற்கு கொண்டு செல்லப்படவில்லை எனக் கூறினேன். ஆனால் அன்றைய சூழலில் பின்தளத்தில் நடந்து கொண்டு இருக்கும் உரிமை கோரப்படாத கொலைகள், விமர்சனங்கள் அலட்சியப்போக்கு உட்பட்ட பின்தளத்திற்கும் தளத்திற்கும் நடக்கும் அரசியல், ராணுவ முரண்பாடுகள் என்பவற்றினால் இந்தக் கொலையில் பின்தளம் சம்பந்தப்படவில்லை. இது முழுக்க முழுக்க ஈஸ்வரனால் திட்டமிடப்பட்டசதி என்றாலும் அதை செவிமடுக்க யாரும் இல்லை.

குருர மனப்பான்மையுள்ள, குறுநில மன்னர்கள் போல் அதிகார வெறியிலும், பதவிப் போட்டியிலும் ஈஸ்வரனும், சிவராமும் இந்த முரண்பாடுகளைப் பாவித்து செல்வன், அகிலன் ஆகியோரின் கொலைகளை மேற்கொண்டனர். மூதூரிலே சிவராமின் தலைமையில் வெங்கட், பி.எல்ஓ. மாமா, சேர்ந்து இக்கொலைகளைச் செய்துள்ளனர். செல்வன், அகிலன் ஆகியோரை பின்தளத்திற்கு அனுப்பியதாக சொல்லி, குற்றத்தை பின்தளத்தை நோக்கி திருப்பிவிட்டு தாங்கள் தப்பிக்க முயன்றனர். இப்போதாவது இதனைப் புரிந்தால் சரி.

மேலும் செல்வன், அகிலன் கொலை பற்றி நீண்ட கால தேடல் எனக்கு இருந்ததால் சரியான தகவல்களை சேகரிப்பதில் மிக அக்கறை கொண்டேன். இதன்படி ஒரு முக்கிய சாட்சியான ஒருவரை நீண்ட காலத்திற்கு பிறகு பெப்ரவரி 01 2011ல் மிகத் தேடி தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். அந்நபர் தற்போது லண்டனில் வசிக்கின்றார். அவர்தான் நான் கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்ட ரகு என்ற ராதாகிருஸ்ணன்.

செல்வன், அகிலன் திருமலை - மூதூரில் தீவிரமாக வேலைசெய்து கொண்டிருக்கும்போது அம்பாறைப் பொறுப்பாளராக இந்த ரகு செயற்பட்டார். இவர்கள் எல்லாம் பார்த்தனின் காலத்திலிருந்தே அதாவது 1980 நடுப்பகுதியில் இருந்தே திருமலை காந்தீயத்திற்குள் உள்வாங்கப்பட்டு குடியேற்றங்கள், பண்ணைகள் என்ற செயற்பாட்டில் (இதில் லண்டனில் உள்ள ஜெயகாந்தன், பிரதீபன் மற்றும் இறந்த கிறிஸ்டி என்ற வசந்தன், சேவல்கொடி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

போன்ற இளைஞர்களும் நினைவு கூறப்பட வேண்டியவர்கள்.) திருமலையில் தீவிரமாக செயற்பட்டு கழகத்தின் ஆரம்ப கட்டமைப்புக்களிலேயே தம்மை இணைத்துக் கொண்டவர்கள். ரகு என்ற ராதாகிருஸ்ணன் குறிப்பிட்ட தகவல்களை சுருக்கமாக இங்கே தருகின்றேன்.

"திருமலை மாவட்டத்தில் பார்த்தன், ஜான் மாஸ்ரர், கேசவன், சலீம் இவர்களை வழிநடத்திய அல்லது இவர்களுடன் செயற்பட்ட முக்கிய நண்பர்களும் தோழர்களுமாய் இருந்ததால் பெரும்பான்மையாக மத்திய குழு அங்கத்தினர் மத்தியிலும் திருமலையைச் சேர்ந்தவர்களின் செல்வாக்கு இருந்தது. பார்த்தன், ஜான்மாஸ்ரர், கேசவன், சலீம் கழகத்தின் தீவிர செயற்பாட்டாளர்களாக திறம்பட செயற்பட்டதால் பின்நாள் கழகத்திற்கு வந்த ஈஸ்வரனுக்கு இவர்களை நோக்கிய காழ்ப்புணர்ச்சி மனதின் அடித்தளத்தில் இருந்துள்ளது. இந்நிலையில் சலீம் பிடிபட, பார்த்தன் மரணிக்க, காந்தன் (ஜான் மாஸ்ரர்) இயக்கத்தை விட்டு வெளியேற திறமையானவர்களின் வெற்றிடங்களை ஈஸ்வரன் போன்றோர் பிடித்துக் கொண்டனர். இவருக்கு மீதியிருந்த மூன்று மாவட்டப் பொறுப்பாளர்களான செல்வன் - அகிலன் - ரகு ஆகியோரை நோக்கிய கடுகடுப்பு நீண்ட காலமாகவே இருந்துள்ளது. இந்நிலையில் இந்த மூவராலும் திருமலை, மூதூர் பகுதியில் இருந்தும் நிறையவே இளைஞர்கள் கடைசிவரை பின்தள பயிற்சிகளுக்கு அனுப்பப்பட்டுக் கொண்டு இருந்தனர்.

அதனால் செயற்பாடுகள் தன்னை மீறி நடப்பதாக ஒரு பய உணர்வு ஈஸ்வரனை ஆட்டிப் படைத்தது. இந்நிலையில் சிவராமும் வந்துசேர ஈஸ்வரன் தனது அரசியல் வறுமைக்கு சிவராமைப் பயன்படுத்தினார். ஏனெனில் செல்வன் அரசியல் ரீதியில் விடயங்கைளக் கையாளக் கூடிய திறமைசாலி. இந்நிலையில் ஈஸ்வரனுக்கு சிவராமின் வருகை வலதுகரமாக இருந்தது. அதனால் செல்வனின் பதவிக்கு ஆப்பு வைக்க திட்டம் தீட்டி, சிவராமை ஆசீபெற்றுவர பின்தளத்திற்கு அனுப்பினார். ஆனால் அந்நேரம் பின்தளம் அரசியல், ராணுவம் என்ற குழப்பத்தின் உச்சகட்டத்தில் இருந்தது. சந்ததியார் கொலை, தோழர் தங்கராஜா வெளியேற்றம், ஜான் மாஸ்ரர் வெளியேற்றம் என்ற அரசியல் சூழல் குழப்பமாய் இருந்ததால் சிவராமை அங்கு யாரும் கண்டு கொள்ளவில்லை. பதவி அங்கீகாரம் எதுவும் கிடைக்கவில்லை.

அதனால் சிவராம் ஈஸ்வரனின் கையாளாகத் தான் செயற்பட்டுள்ளார். பின்தளத்தில் சிவராமிற்கு கிடைக்காத அங்கீகாரத்தை ஈஸ்வரன் தனது கிழக்கு மாகாண பொறுப்பாளர், மத்திய குழு அதிகாரம் என்பவற்றை பாவித்து செல்வன் - அகிலன் - ரகு ஆகியோரை அப்புறப்படுத்தி அந்த வெற்றிடங்களை தமது கையிலிருப்பவர்களை வைத்து நிரப்பிச் செயற்பட்டார். இதற்கு உதாரணம் செல்வனை கொலை செய்ய வைத்து விட்டு தனது கட்டுப்பாட்டில் இருந்த பிரசாத் என்பவரை பொறுப்பாளராக்கியமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் பின்னணியிலேயே யாழிலிருந்து புறப்பட்ட சிவராமிடம் செல்வன் - அகிலன் - ரகு ஆகியோரது உயிரைப் பறிக்கும் கடிதத்தை கொடுத்து அனுப்பி உள்ளார். இந்தக் கடிதம் கிழக்கு மாகாண ராணுவப் பொறுப்பாளராகிய பத்தனுக்கே எழுதப்பட்டது. ஆனால் மட்டக்களப்பில் நின்ற பத்தன் இக்கடிதத்தை வாசித்து விட்டு இந்த சூட்மத்தை புரிந்து கொண்டு தன்னால் இதற்கு உதவி செய்ய முடியாதென மறுத்துள்ளார். அதனால் சிவராம் தனது தலைமையில் பி.எல்.ஓ.மாமா, வெங்கட் ஆகியோரை அழைத்துச் சென்று கடற்கரைச்சேனை திருநாவுக்கரசிடம் (நான் முன்பு தலைமறைவாகி இருந்ததாக குறிப்பிட்ட காந்தீய - கழகத் தொண்டர்) சூட்சுமமான முறையில் செல்வனின் இருப்பிடத்தை கேட்டறிந்து கொண்டு முதலில் செல்வனைப் பிடித்து கைகாலெல்லாம் அடித்து முறித்து சித்திரவதை செய்துள்ளார். அகிலனையும் பொய் சொல்லி இதே இடத்திற்கு வரவைத்து இருவரையும் கொலை செய்து மூதூரிலேயே புதைத்துள்ளனர்.'' இதுவே ரகு என்னிடம் சொன்ன சாட்சியம்.

பத்தன் கடிதம் வந்த செய்தியை அம்பாறையில் இருந்த ரகுவிற்கு கூறியதால், ரகு மிக அவதானமாக இருந்தார். ஆனால் சிவராம் குழுவினர் ஈஸ்வரன் இட்ட பணியை முற்றுமுழுதாக முடிக்கத் திட்டம் போட்டு பல வழிகளில் ரகுவை தமதிடத்திற்கு வஞ்சகமாக அழைத்திருந்தனர். அது சாத்தியப்படாமல் போகவே மட்டக்களப்பிற்கு வந்தும் ரகுவுக்கு செய்திகள் அனுப்பி உள்ளனர். ரகு சாதூரியமாக செயற்பட்டதால் இன்று இந்த உண்மைகளுக்கு சாட்சியாக உள்ளார்.

மேலும் பிற்பட்ட காலத்தில் புலிகளால் கழகம் அழிக்கப்படும் நிலையில் ரகு, சிவராம் முதற்கொண்டு பலர் யாழ்ப்பாணத்தில் மென்டிஸ் இன் பொறுப்பில் உள்ள முகாம்களில் தங்கி இருந்தனர். அப்படியான ஒருநாளில் ரகுவும் சிவராமும் ஒரே இடத்தில் தங்க வேண்டி ஏற்பட்டது. அன்றைய உரையாடலில் செல்வன் - அகிலன் விடயத்தில் நடந்த சம்பவங்கள் அத்தனையையும் சிவராம் ரகுவுக்கு சொல்லி உள்ளார். "எனது பிடியில் இருந்து நீர் தப்பியது பெரிய சாகசம்" என்ற போர்வையில் நடந்தவற்றை இரை மீட்டுள்ளார் சிவராம்.

ஏற்கனவே குறிப்பிட்டது போல செல்வன் - அகிலன் இருவரையும் பிடித்து பின் தளத்திற்கு அனுப்பியதாகச் சொல்லி ஈஸ்வரன் தன்னை இச்சம்பவத்தில் இருந்து தப்பிக்க முயன்றார். ஆனால் பின்நாட்களில் ஈஸ்வரனுடைய தொடர்பு தெரியவந்தது. அப்போது ஈஸ்வரன் கொலைப் பழியை சிவராம் மீது போட்டுத் தப்பிக்கொண்டார். அதற்குப் பதிலடியாக ஈஸ்வரன் பக்தனுக்குக் கொடுத்து அனுப்பிய கடிதத்தை சிவராம் வைத்துக் கொண்டு ஈஸ்வரனை அம்பலப்படுத்தியதாகத் தெரிகிறது.

அதுபோல் இந்த செல்வன் - அகிலன் கொலை முதலில் பின்தளத்திற்கு அனுப்பப்பட்டதென கதையை சொல்லி பழியை பின்தளத்தினை நோக்கி திருப்பிவிட்டு ஈஸ்வரன் தாம் தப்ப முயற்சித்தாலும் பின்னாளில் உண்மைகள் சாட்சிகளோடு தெரியவர ஈஸ்வரன் தான் தப்பித்துக்கொள்ள சிவராமை மாட்டிவிட முயற்சிக்க, இந்த வேளையில் சிவராம், ஈஸ்வரன் பக்தனுக்கு கொடுத்து விட்ட கடிதத்தை வைத்துக் கொண்டு பலருக்கும் காட்டி சிவராம் ஈஸ்வரனை அம்பலப்படுத்தியுள்ளார்.

இந்தக் கடிதம் தளமகாநாட்டில் காட்ட வைத்திருப்பதாகவும் பலருக்கு கூறப்பட்டது. (தள மகாநாட்டில் நான் முழுதாக இல்லாததால் பின்னாளில் நடந்தது எனக்கு தெரியவரவில்லை). ஆனால் தள மகாநாட்டில் கலந்து கொண்ட மத்திய குழு உறுப்பினர்கள் என்று சொல்லப்படுபவர்கள் இனியாவது வாய்திறக்க வேண்டும். இதற்கான சாட்சியாக மட்டக்களப்பில் பக்தனும், பிரான்ஸில் வெங்கட்டும், இலங்கை கருணா குழுவில் புலனாய்வு பிரிவில் பி.எல்ஓ மாமாவும், உள்ளனர். இவர்கள் மனச்சாட்சி ஒன்று இருந்தால் எந்த தளத்திலாவது உண்மைகளை வெளிக்கொணர்ந்தால் இந்த கடைசிக் காலத்தில் தமது மனச்சாட்சிக்காவது விரோதமில்லாது இருப்பார்கள். ஏனெனில் 'கத்திகளின் சகவாசம் நித்திரையை பழிகேட்கும்" என்ற வாசகத்தை அவர்கள் உணர்ந்தால் உண்மைக்கு சாட்சியாவார்கள்.

இந்த கொலையைப் பற்றி பிறிதொரு நேரம் சிவராமுடன் நான் முரண்பட்டு உண்மையை ஒத்துக் கொள்ளச் சொன்னபோது சிவராம் ஒரு விடயத்தை என்னிடம் கூறினார். இவர்களை வீட்டில் வைத்து பிடித்துச் செல்லும் போது ஆவணங்களுடன் சில கடிதங்களும் பிடிபட்டதாக அதில் எனது கடிதங்கள் சிலது இருந்ததாகவும் அந்தக் கடிதத்தை வைத்து பார்க்கும் போது செல்வனுக்கும் எனக்கும் மிக நெருக்கமான தொடர்பு இருந்ததாகவும் (இக்கடிதங்களை, நான் செல்வனின் பழைய சிநேகிதம் என்ற உணர்வில் எழுதுவதால் எனது சொந்தப் பெயரில் எழுதியிருப்பேன்) அதனூடு வெங்கட்டுக்கு நான் யார் என்ற சந்தேகமும் வந்ததாக குறிப்பிட்டு சொன்னார். இவையெல்லாம் நிரூபிக்கப்பட வேண்டுமென்றால் அவர்களின் மனச்சாட்சியைப் பொறுத்தது.

எனவே இக் கொடுமைகளை எல்லாம் தளநிர்வாகத்தில் முறையிட்டும் யாருமே எதுவுமே இயலாத கையாலாகதவர்களாகத்தான் இருந்தார்கள். பின்தளத்தில் நடக்கும் கொலையைத்தான் கேட்க திரணியில்லை என்றால் தளத்தில் நடந்ததை இவர்களுக்கு வெளிச்சம் போடவும் தெரியவில்லை. அதற்கான காரணத்தை சம்பந்தப்பட்டவர்கள்தான் இனியாவது சொல்ல வேண்டும்.

மேலும் இந்த செல்வன் - அகிலன் பின்தளத்திற்கு கடத்தப்பட்டதான செய்தி ஊரெல்லாம் பரப்பப்பட்ட நிலையில் திருமலை நகரப்பகுதியில் வாழும் செல்வனின் தந்தை சின்னத்துரை அவர்களும் தாயாரும் தமது மகனை உயிரோடு விடுவிக்க உடனடியாக தமிழ்நாட்டிற்கு வந்து சென்னையில் கழக அலுவலகத்தை தொடர்பு கொண்டு தமது மகனை பார்க்க வேண்டுமென விடாப்பிடியாக நின்றனர். ஏற்கனவே இங்குள்ள பதட்ட செய்தியாக இந்த சம்பவம் பின்தளத்திற்கு தெரிந்திருந்தாலும். தளத்தில் நடந்த சம்பவத்திற்கு தமது பிள்ளையை தேடி பெற்றோர் பின்தளம் வந்திருப்பது அங்குள்ள கழகத்திற்கு பெரும் சிக்கலாக இருந்தது.

தொலைத்தொடர்பு மூலம் பின்தளத்தில் இருந்து எனக்கு செய்தி வந்தது. 'நீங்கள் எல்லாம் அங்கு என்ன செய்கின்றீர்கள். இங்கிருக்கும் பிரச்சனையில் அங்கு நடந்த கடத்தலையும் கொலையையும் இங்கு சாட்டிவிட்டீர்களா? அங்கு என்ன நடக்கின்றது?" என தொலைத்தொடர்பில் செயலதிபர் மிக கோபம் வந்தநிலையில் திட்டினார். பின்தளத்தில் செல்வனின் சகோதரன் முகாமில் இருப்பதாலும் தொடர்ந்து திருமலைப் பையன்கள் குழம்புவதாலும் அவரின் பெற்றோர் எனக்கு தெரிந்தவரானதாலும் உடனே என்னை வந்து இந்தப் பிரச்சனைகளை முடிவுக்கு கொண்டு வரச்சொன்னார் செயலதிபர். இதன்படி நான் அவசரமாக ஓரத்தநாட்டிற்குச் சென்றேன்.

இதில் செல்வனின் சகோரரைப் பற்றி சில விடயங்கள் இங்கு குறிப்பிட வேண்டி உள்ளது. செல்வன் என்ற கிருபா பார்த்தனின் நீண்ட கால நண்பனாகவும் காந்தீயத்தில் இருந்து கழகம் வரை ஒன்றாக செயற்பட்டவராகவும் இருந்தார். இவரின் அரசியல் பிரவேசத்தை இவரின் குடும்ப உறவுகள் சிறிதும் அங்கீகரிக்கவில்லை. எனினும் இந்த நேசமான குடும்ப உறவுகளையும் பல்கலைக்கழகத்தை நோக்கி படித்துக் கொண்டிருந்த படிப்புகளையும் விட்டுத்தான் கழகத்தில் முழுநேர உறுப்பினரானார். இதனை இவரது தம்பி சிறி கூட ஆதரிக்கவில்லை. இந்த தம்பி சிறியும் அவரின் நண்பர் சுகுணகுமாரும் மருத்துவ கல்விக்கான பல்கலைக்கழக அனுமதி கிடைத்து யாழில் படித்துக் கொண்டு இருந்தனர். இந்த 83 கடைசி அல்லது 84 பகுதிகளில் சிறியின் அறைக்கு பார்த்தன் போய்வந்து சிலவேளைகளில் தங்கியும் உள்ளார் என அறிகின்றேன். இந் நிலையில் அண்ணா கிருபாவின் அரசியலால் சிறிக்கு அரசியல் உடன்பாடு இல்லையானாலும் பார்த்தனின் தொடர்பால் அரசியலில் ஒரு பார்வையிருந்தது. இந்நிலையில் பார்த்தனின் எதிர்பாராத மரணம் சிறியையும் சுகுணகுமாரையும் மிக பாதித்தது. இதன் தாக்கத்தால் மருத்துவப் படிப்பை அப்படியே விட்டு விட்டு இருவரும் பின்தளப்பயிற்சிக்கு வந்து ராணுவப்பயிற்சியை முடித்துவிட்டு, மேற்கொண்டு இவர்களின் மருத்துவ திறமையால் பின்பு எல்லா முகாம்களிற்கான வைத்தியர்களாக பங்காற்றினர். சிறி, நேரு என்ற பெயரில் அங்கிருந்தார் என நினைக்கின்றேன்.

எனவே உடனேயே (ஓரத்தநாடு அலுவலகத்தில் என்று நினைக்கின்றேன்) இவர்கள் இருவரையும் சந்தித்து நடந்த விடயம் முழுவதையும் விபரமாக கூறி இவர்களின் பெற்றோர்கள் சென்னையில் சந்திக்க காத்திருப்பதையும் சொன்னேன். "நான் சொன்னவற்றை எந்தளவு தூரம் நம்புகின்றீர்களோ தெரியாது, எதற்கும் நீங்கள் இருவரும் மருத்துவர் என்ற நிலையில் எல்லா முகாம்களுக்கும் போகக்கூடியவர்கள். தயவுசெய்து சந்தேகம் இருந்தால் நானும் வருகின்றேன் எல்லா முகாம்களையும் பார்ப்போம்" என்றேன். அவர்கள் உடனே பெற்றோரை பார்க்க விரும்புவதாக சொன்னதில், உடனே இவர்களும் நானும் சென்னையில் எமது அலுவலகத்திற்குச் சென்று பெற்றோரைச் சந்தித்தோம். செல்வன் சம்பந்தப்பட்ட முழுவிடயத்தையும் சொல்லி இந்த சம்பவத்திற்கு காரணமானவர்களை கழகம் மேற்கொண்டு விசாரித்து ஆவன நடவடிக்கை எடுக்கும் எனக் குறிப்பிட்டு சிறியையும், சுகுணகுமாரையும் அவர்களுடனேயே அனுப்பி வைத்தோம். இந்த உண்மைகள் எல்லாம் கனடாவில் தற்போது மருத்துவராக இருக்கும் சிறிக்கும், லண்டனில் இருக்கும் சுகுணகுமாருக்கும் தெரியும்.

எனவே இந்த செல்வன் - அகிலன் கொலைபற்றி எனக்கு தெரிந்த, நான் அறிந்து ஆத்திரப்பட்ட, மிக உடைந்துபோன உணர்வுகளை தெளிவாகவே இதில் சம்பந்தப்பட்ட நபர்களின் விபரங்களுடன் முழுமையாக வெளிபடுத்தியுள்ளேன். செல்வன் - அகிலனைப் பற்றி தெரியாதவர்களாக இருந்தாலும் கழகத்தின் உட்கொலைக்காக குரல்கொடுத்தவர்களுக்கு இருக்கும் வேதனையை ஆத்திரத்தை விட எனக்கு உள்ள கோபம், வேதனை சற்று அதிகமானதே. ஏனெனில் செல்வன் - அகிலன் என்னுடைய நல்ல நண்பர்கள் தோழர்கள் என்பது மட்டுமல்ல அவர்களது குடும்பமும் எனக்கு நெருக்கமானவர்கள். 83 ஐப்பசி மாதத்தின் பின் நான் கழகத்தில் செல்வனுடன் தான் வேலை செய்தேன். 83 பிற்பகுதியில் செல்வனும் நானும், பீலிக்ஸ் உம்தான் எத்தனையோ ஆண் - பெண் இளைஞர்களுக்கு வகுப்பெடுத்து அனுப்பினோம்.

**தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் - வரலாற்றுக் குறிப்புகள் முன்னைய பதிவுகளுக்கு:**

அகிலன் - செல்வன் படுகொலை! தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் - எனது சாட்சியம் - பகுதி 3 : ஜெ ஜென்னி


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

கழக முக்கிய உறுப்பினர்கள் வெளியேற்றம்! சுழிபுரம் படுகொலைகள்! தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் எனது சாட்சியம் - பகுதி 2 : ஜெ ஜென்னி

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் எனது சாட்சியம் - பகுதி 1 : ஜெ ஜென்னி

நினைவுப் பதிவுகளில் இருந்து - தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தோற்றம்! : நிலா (முன்னாள் கழகப் போராளி)

எழுத்தில் வல்லவன் எழுதுவது வரலாறு அல்ல! கண்ணாடிச் சந்திரன் உண்மையைத் தேட வேண்டும்! - கழக வரலாற்றுக் குறிப்பு: ராம் (தேசம்நெற் கருத்தாளர்)

பேராதனை கம்பஸில இருந்து ரொறன்ரோ - புளொட் இறக்கம்! தீப்பொறி இறக்கம்! மணியண்ணை ரைட் : பொறிமகன்

புலிகளின் கண்ணாடி விம்பமே புலிகளை வென்ற அரசு. - கேணல் கிட்டு மீதான கைக்குண்டுத் தாக்குதலும் அதன் எதிர்வினைகளும் : த ஜெயபாலன்

தமிழீழ மக்கள் விடுதலை கழகம் - கடந்து வந்த தடங்கள் - பகுதி (2)

தமிழீழ மக்கள் விடுதலை கழகம் - கடந்து வந்த தடங்கள் - பகுதி (1)

« Jaffna University Giving the UGC its Due : John Ratnathurai | Home | சூட்டுக் காயங்களுடன் இராணுவச் சிப்பாயின் சடலம் யாழ்.வைத்தியசாலையில் ஒப்படைப்பு. »

**Related posts:**

- Will be added soon here...
-

**உங்கள் கருத்து**

This entry was posted on Sunday, February 27th, 2011 at 1:07 am and is filed under கட்டுரைகள்/ஆய்வுகள், ஜென்னி ஜெ. You can follow any responses to this entry through the RSS 2.0 feed. You can leave a response, or trackback from your own site.

**19 Comments so far**

1. Rohan on February 27, 2011 3:09 am

   எத்தனை லேபல்களை வைத்திருந்தாலும் படுகொலைகள் செய்வதில் எல்லோரும் ஒரே மாதிரியாகத் தான் இருந்திருக்கிறார்கள். இதற்குள் பம்மாத்துகளுக்கு ஒன்றும் குறைவில்லை!

   //இவர்கள் மனச்சாட்சி ஒன்று இருந்தால் எந்த தளத்திலாவது உண்மைகளை வெளிக்கொணர்ந்தால் இந்த கடைசிக் காலத்தில் தமது மனச்சாட்சிக்காவது விரோதமில்லாது இருப்பார்கள். //

   நீங்களும் இப்படி ஒரு எதிர்பார்ப்புடன் இருக்கிறீர்களா?

2. alex.eravi on February 27, 2011 10:26 am

   இன்று இருக்கும் பலருக்கு கழகத்தின் வரலாற்றுப் பின்னணி தெரியாததால் அவர்கள் மிக ஆத்திரம் கொள்வதுவும்... நடந்த உண்மைகளை விமர்சனதிற்கு கொண்டு வருபவர்களை துரோகிகளாக்குவதும்... அவர்களின் அறியாமை என எடுக்கலாம். ஆனால் கடந்த காலங்களில் நடந்த விடயங்கள் தெரிந்தவர்கள்... பழைய உறுப்பினர்கள்... இன்றும் இவ்வளவும் நடந்தும் உண்மைகளை ஏற்க மறுப்பது தங்களது... தாங்கள் விட்ட பிழைகள்... உண்மைகள் வெளியில் தெரிந்து விடும்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

என்றா... என்னவென்று தெரியவில்லை.

1983 July இன் பின் கழகத்தில் இணைந்த பலரே கழகத்தின் ஆரம்பம்... வளர்ச்சி... தெரியாமல் இருக்கும் போது தாங்கள் தற்போதைய கழகத்தின் தலைவர் திரு. சித்தார்த்தன் அவர்களுடன் தொடர்பு கொண்டு கடந்த கால கழகத்தின் செயற்பாடுகளை எமது கடைசி காலத்திலாவது சுயவிமர்சனங்களோடு நாம் வெளிப்பட வேண்டும் என்ற ஆதங்கத்துடன் இந்த சாட்சிய பதிவை தொடங்கியமை பாராட்டுக்குரியது அல்ல... பல உயிர்கள் பறிபோய்... எத்தனையோ ஆயிரக்கணக்கானவர்களின் அர்ப்பணிப்புகள் வீணாகி... ஓர் மக்கள் போராட்டமே அழிவை சந்தித்துள்ள நிலையில் இது ஓர் வரலாற்று பாடமாக மட்டுமல்லாமல்... பலரின் மனதில் புதைந்து கிடக்கும் சந்தேகங்கள்... கேள்விகள்... என்பனவற்றிற்கு விடை கொடுப்பதோடு, எம்மைப்போல்... எம்மினத்தைபோல்... தொடர்ந்து நடக்கப் போகும் பாதையை சரியான பாதையில் நடக்க பலருக்கு வழி வகுக்கும்...!!!

தாங்கள் "நிலா" என்ற பெயரில் இங்கு பதியும் போது எனக்கு நன்கு அறிமுகமான... நம்பிக்கையான... கணபதி தான் பதிகிறார் என்று முன்பு யோசித்தேன்... பின் கிழக்கிலங்கையை சேர்ந்தவராக தெரிந்தது (அதன் பின் தாங்களும் கணபதி இல்லை என்று தெரிவித்தீர்கள்). அத்தொடரில் எனக்கும் இருக்கும் மனக்குறைகள்... தெரிந்தவை... விமர்சிக்க வேண்டியவை... என்று சிலவற்றை பதிய விரும்பினேன். ஆனால் அதில் பின்னூட்டம் எழுதியவர்கள் பலர் தனிப்பட்ட கோப தாபங்களை கொட்டி தீர்த்ததையும்... ஆடு கடித்தது போல் தமக்கு தெரிந்ததை கொட்டி தீர்த்ததையும்... காணுமிடத்து ஆரோக்கியம் இல்லாமையும்... பலரின் அர்ப்பணிப்புகளினூடே வளர்ந்த கழகத்தை, கழகத்தை தெரியாத வெளி ஆட்களிற்கு வாய்க்கு சப்பு போடுவதற்கு போட்டுக் கொடுப்பது போல் இருந்தது.

தற்போது தாங்கள் தங்களை அறிமுகப்படுத்தி இங்கு வரும்போது பகுதி-2 இல் சுழிபுரம் கொலை பற்றி அந்நேரம் நான் அறிந்த விடயத்தை இங்கு பகிர விரும்பியும்... பின்னும் என் மனம் இடம் கொடுக்கவில்லை (அப்பதிவில் பின் பதிகிறேன்). தற்போது செல்வனைப் பற்றி தாங்கள் இங்கு பதியும் போது மனம் கேட்கவில்லை. திரு. சின்னத்துரையை அந்நேரம் அண்ணா நகரில் சந்தித்தபோது அந்நிலையை நான் அறிவேன். இங்கு நான் கேட்பது அக்கொலையில் சம்பந்தப்பட்டவர்கள் அதற்கு ஏற்ற தண்டனையை ஏற்றார்களா...??

செல்வன், அகிலனைப் போல் கொலைகளில் சம்பந்தப்பட்டவர்கள் வெளிக்கொண்டு வரப்பட வேண்டும்...!!! அவர்களுக்கு ஏற்ற தண்டனைகளை அவர்கள் ஏற்க்க வேண்டும்...!!!

தாங்கள் கூறுவது போல் யாரோ சிலர் தங்கள் பற்றிய புதைந்து கிடக்கும் உண்மைகள் வரப்போகின்றதென்று ஆதங்கப்பட்டு தவறான ஊகங்களைப் பரப்புகின்றனர் என்பது உண்மை. ஒரு வருடத்தின் முன் நான் ஓர் சில பொதுவான விடயங்களை பொதுவாக ஓர் இணையதளத்தில் பதியும் போது சிலர் கண்ணாடி வீட்டிற்குள் இருந்து கொண்டு நெருப்பு சுவாலையை விட்டார்கள்.

தற்போது அடுப்படி 'நெருப்பு' ஊதியே பெண்கள் வாழ்கையை ஓட்ட வேண்டும் என்ற பாணியில் மட்டும் இவர்கள் சிந்திக்கவில்லை... ஓர் கடந்த வரலாறு தெரிந்த பெண் போராளி தன் சொந்தப் பெயரிலேயே சுய விமர்சனத்தோடு இங்கு தனது சாட்சியத்தை பதியும் போது தாங்கள் முன்னர் விட்ட பிழைகள் வெளியில் யார் மூலமாவது பதியப்பட்டுவிடுமோ என்று அஞ்சுகிறார்கள். தற்போதும் இப்படிப்பட்டவர்களால் விமர்சனத்தை ஏற்று ஓர் ஆரோக்கியமான எதிர் விமர்சனத்தை வைக்க முடியாது, விமர்சனத்தை வைப்பவர்கள் மேல் தனிப்பட்ட கீழ்த்தரமான தாக்குதலையே தொடுக்குவார்கள்.

ஜான் மாஸ்டர் கூறியது போல், "பொது வாழ்க்கை என்று வந்தபின்னர் ஒருவர் சிறிய சலசலப்புக்களைக் கண்டு அஞ்ச முடியாது. காய்க்கின்ற மரத்திற்குத்தான் கல்லெறி என்பார்கள். அதுபோலவே, பொதுப்பணியில் ஈடுபடும்போது பல்வேறு விதமான விமர்சனங்கள், விவாதங்கள், ஏன் சர்ச்சைகளும் எழுவது தவிர்க்க முடியாததாகிறது. இவையெல்லாம் கூட ஒருவித தொழில்சார்ந்த இன்னல்கள் (occupational hazard) என்றும்

கருதப்படலாம். இவற்றையெல்லாம் தைரியமாக முகம் கொடுத்து முறியடித்துச் செல்வதன் மூலமாகவே நாம் செய்ய முனையும் இலக்குகளை நோக்கி உறுதியாக முன்னேற முடியும்".

கழகத்தின் கடந்தகால வரலாறு மீளாய்வு செய்யப்பட வேண்டிய அவசியம்... கட்டாயம் தேவை. இன்று கழகத்தில் இருந்தவர்கள்... உண்மைகள் தெரிந்து இன்றும் இருப்பவர்கள்... இதை ஆக்கபூர்வமாக கொண்டு செல்ல வேண்டும்...!!! இதற்கு தற்போது திரு. சித்தார்த்தனின் தலைமை ஒத்தாசை கொடுக்க வேண்டும்...!!! ஆனால் புலம் பெயர்ந்து குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டும் தாம் தான் கழகம் என்று கலங்கி நிற்பவர்கள்...??

ஓர் பெண் சுயவிமர்சனம் செய்வதைக் கூட ஏற்றுக்கொள்ள முடியாத இப்படிப்பட்ட பலர் உள்ளனர்...!!!

எல்லாவற்றிக்கும் காலம்தான் பதில் சொல்ல வேண்டும்...!!!

- அலெக்ஸ் இரவி (நானும் எனது புனை பெயரிலேயே - அறிந்தவர்கள் அறிவார்கள்/ அறியாதவர்கள் வர வர அறிவார்கள்)

3. பல்லி on February 27, 2011 9:24 pm

ஒரு மாதிரி மூவரின் கட்டுரையையும் படித்து இவர்களுடன் சிறிது தர்க்கம் செய்யலாம் என நான் புறப்படும் போது இந்த ஜென்னியின் கட்டுரை என்னை தடுமாற வைத்து விட்டது; ஒரு பெண்போராளி இத்தனை விடயங்களை தெரிந்து துணிந்து எழுதும்போது கழக முன்னனியினர் பின் கழகத்தை விட்டு ஓடியவர்கள் அப்படியே தீப்பொறி தொடங்கியவர்கள், அதிலும் கட்டுபாட்டு குழுபோல் இயங்கிய மூவர் (கண்ணாடி, வாத்தி, நேசன்) வந்தார்கள் தாம் கற்றதை கக்கினார்கள் மறைந்தார்கள், இதில் நேசன் மட்டும் பக்கத்து வீட்டில் போய் நின்று சரத்தை மடித்து கட்டுகிறார், அதுக்காக ஜென்னியை சரியென நான் சொல்லவில்லை; ஆனால் அவர் தரும் தகவல்கள் பல உயிருடன் இருப்பவர்கள்? அதனால் அவர் பொய் சொன்னாலும் அது அவர்களால் தட்டி கேக்கபடலாம்; இருப்பினும் அவரது தகவலை அவரது பாகங்கள் முடிந்த பின்பு வைப்போம் என உள்ளேன்; ஆனால் கண்ணாடி; வாத்தி; நேசன், உங்கள் கடந்தகாலம் இந்த தேசம் வராவிட்டால் உங்கள் எதிர்கால (அரசியல்) நம்ம தேசத்தில் நிலைக்காது; இருப்பினும் நானும் தேசத்தில் ஒரு வாசகன் என்பதால் ஜென்னியின் துணிவான எழுத்துக்கு அலெக்ஸ் போல் வாழ்த்தவே விரும்புகிறேன்; ஜென்னி தரும் தகவல்கள் எதிர்காலத்தில் ஈழசதிராட்டத்தின் தேசதளத்தின் சாட்ச்சியாக மாறலாம்; அதை நெறிபடுத்தும் பொறுப்பு வாசகர்களுக்கு உண்டு நானும் அதை உனர்கிறேன்; தொடரும் பல்லி;;;;;;

4. naan on February 28, 2011 4:09 am

யென்னி!

நீங்கள் குறிப்பிடும் சிவராம் இந்த 'so called' பத்திரிக்கையாளர் சிவராமா?

அசோக் என்று குறிப்பிடப்படுபவர் பரிசில் தற்போது வசிப்பவரா?

அப்படியாயின் படுகொலைகளுக்கு எதிரான சனநாயகம் பேசும் இலக்கியச் சந்திப்பு கூட்டத்திற்கு அவர் எதற்கு சிவராமைக் கூட்டி வந்தார்?

யென்னி நீங்கள் இவற்றை ஆங்கில ஊடகங்களில் மொழிமாற்றி வெளியிடப்படுவதை விரும்புவீர்களா?

நன்றி

வின்சென்ற்
(நான் முன்நாள் எந்த இயக்கப் போராளியும் அல்ல)
(இது ஒரு தரமும் அல்ல தடையும் அல்ல)

5. thankam on February 28, 2011 4:42 pm

ஜென்னி,

நீங்கள் செல்வனின் கொலை சம்பந்தமாக வழங்கும் வாக்கு மூலம் முற்றிலும் சரியானதல்ல என்பது உங்களுக்கே நன்கு தெரியும், செல்வனின் பெற்றோரும் சகோதரரும் புலம் பெயர்ந்த நாடொன்றில் வசிக்கிறார்கள் அந்த வயதானவர்களிடம் உங்கள் வாக்கு மூலத்தை வாசித்துக் காட்டி மனதை கீற நாம் விரும்பவில்லை, செல்வனுடன் கடைசியாக கழக வேலைகளில் ஈடுபட்ட நாம் இன்னமும் உயிருடன் இருக்கிறோம் என்பதையும் மனதில் கொள்க

6. kovai on February 28, 2011 5:35 pm

தங்கம்!
"…செல்வனுடன் கடைசியாக கழக வேலைகளில் ஈடுபட்ட நாம் இன்னமும் உயிருடன் இருக்கிறோம் என்பதையும் மனதில் கொள்க."

தங்க வைத்திருப்பதை கொட்டிவிடுங்கள். சமையலின் சுவை தாளிப்பதில்தான் தங்கியுள்ளது, நமக்கு தெரியாத விடையமல்ல.

7. **சாந்தன்** on February 28, 2011 6:43 pm

அன்புள்ள ஜென்னி,

உங்களின் கருத்துக்களை கவனமாக வாசிக்கிறேன். ஆனால் நீங்கள் உங்களை விமர்சனம் செய்வோரை நெருப்பு ஊதல் அடுப்பு ஊதல் கோஷ்டி என வசைபாடுவதை தவிர்த்தல் நல்லது. இங்கே யாரும் உங்களை அவ்வாறு வெளிப்படையாகவோ அன்றி மறைமுகமாகவோ கூறியதாக நான் காணவில்லை. இன்னும் விமர்சிக்கும் ஆண்களை இவ்வாறான இலகுவான பெயின்ற் அடிக்கும் வேலையை நிறுத்துங்கள். இவற்றை பெண்கள் சந்திப்பில் இருக்கும் 'போலி' பெண்ணீய வாதிகள் வேண்டுமென்றால் கைதட்டி ரசிக்கலாம் ஆனால் உண்மையான முற்போக்குவாதிகள் ஏற்கமாட்டார்கள்.

//அப்படியாயின் படுகொலைகளுக்கு எதிரான சனநாயகம் பேசும் இலக்கியச் சந்திப்பு கூட்டத்திற்கு அவர் எதற்கு சிவராமைக் கூட்டி வந்தார்?
– naan//
நீங்கள் சனநயகம் பேசும் அக்கூட்டத்தினைப்பற்றி தவறாக நினைத்து விட்டீர்கள். அவர்கள் சனநாயகம் என்றால் 'புலிக்காய்ச்சல்' தவிர வேறில்லை. ஆகவே அக்காலத்தில் புலிஎதிர்ப்பாளராக ஐலண்ட்/சண்டே ரைம்ஸ் இல் பத்தி எழுத்தாளராக இருந்த சிவராமை கூட்டிவந்தார். அவரும் வந்தார். சனநாயகவாதிகளும் அணைத்து மகிழ்ந்தனர். பின்னர் சிவராம் புலிஆதரவு நிலைப்பாடு எடுத்தவுடன் எல்லாம் மாறிபோச்சு! இதேபோலத்தான் பெண்கள் சந்திப்பு கோஷ்டியிலும் இலக்கியச் சந்திப்பு கோஷ்டியிலும் தற்போது சிலரது நிலை!

8. Ajeevan on February 28, 2011 8:45 pm

ஜென்னி , நீங்கள் நிலா என்ற பெயரில் எழுதிய "நினைவுப் பதிவுகளில் இருந்து - தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தோற்றம்! - கழக வாரலாற்றுக் குறிப்பு : நிலா (முன்னாள் கழகப் போராளி)" வரலாற்று குறிப்புக்கும் ; தற்போது உண்மை பெயரோடு நீங்கள் ஜென்னி என எழுதும் "தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் எனது சாட்சியம்" எனும் பதிவுகளுக்கும் இடையே ஏகப்பட்ட முரண்பாடுகள் தெரிகின்றன.

நிலா எழுதிய குறிப்பில் பரந்தன் ராஜன் குறித்து பண்ணை தொடர்பான கட்டுரைகளில் எழுதி வந்த நீங்கள் , ஜென்னி என எழுதிய தமிழீழ விடுதலைக் கழக குறிப்புகளில் பரந்தன் ராஜன் அறவே இல்லாமல் போயுள்ளார். தற்போது சந்திதியார் குறித்து உங்களால் எழுதப்படுகிறது.

//தமிழ் குடியேற்றத்திட்டங்களும் பண்ணைகளும்:

---

இதே காலகட்டத்தில் மட்டக்களப்பு வாழைச்சேனையில் இருந்து 20 மைல் தொலைவிலுள்ள மதுரு ஓயா அருகிலுள்ள புனானை என்ற எல்லைக் கிராமமொன்றில் சிங்களக் குடியேற்றத்தை தடுக்க மரியசிங்கம் இஞ்சினியர்

அவர்களால் தமிழ் குடியேற்ற வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது. அது பாதியில் கைவிடப்பட்டதும், அதிலும் சந்ததியார், ராஜன், சிறி முதலானோர் இணைந்து கொண்டனர். //

எனக்கு அந்த காலங்கள் குறித்து தெரியாது. இருந்த போதிலும் காந்தீயம் குறித்த தகவல்களை சமுக விஞ்ஞானக் கல்லூரியில் பெரும்பாலும் அறிய முடிந்தது. அது மாத்திரமல்ல கனகராசா அண்ணன் ஆரம்ப கால போராட்ட தகவல்களை ஒரு பாடமாகவே முன் வைத்தார். அங்கே ராஜா நித்தியன் அவர்களும் இருந்ததால் பக்க சார்பற்று உண்மையான தகவல்கள் முன் வைக்கப்பட்டன. அனைத்து இயக்கங்கள் குறித்தும் மறைக்காமல் எமக்கு தெரிவிக்கப்பட்டது.

உங்கள் கட்டுரைகளில் சில முரண்பாடுகளை அவதானித்து வந்தேன். எனவே இத் தருணத்தில் அதை கேட்பது சரியென உத்தேசிக்கிறேன். இந்த முரண்பாடு எதனால் ஏற்பட்டுள்ளது?

- ajeevan

9. j.jenney on February 28, 2011 10:55 pm

சாந்தன் வணக்கம்!
"ஆனால் நீங்கள் உங்களை விமர்சனம் செய்வோரை நெருப்பு ஊதல் அடுப்பு ஊதல் கோஷ்டி என வசைபாடுவதை தவிர்த்தல் நல்லது. இங்கே யாரும் உங்களை அவ்வாறு வெளிப்படையாகவோ அன்றி மறைமுகமாகவோ கூறியதாக நான் காணவில்லை"
நீங்கள் குறிப்பிட்டது போல் இத் தேசத்தளத்தில் யாரும் என்னை வசைபாடவில்லை. நான் எனது பதிவுகளை நிலாவென்றும் பின் ஜென்னி என்றும் தொடங்கிய காலத்திலிருந்து கழகத்தின் பெயரைப் பாவித்தும் சில தனிநபர் ஈகோ முரண்பாட்டாலும். வேறு அவரவர்களுக்கே மட்டும் புரிந்த காரணத்தை மனதில் வைத்தும் எனக்கு பலவிதத்திலும் தொல்லை தந்தார்கள் இன்றுவரைகூட. தங்கள் நலத்திற்காக எனக்கும் தற்போதைய கழகத்திற்கும் உள்ள நல்உறவை சிதைக்க இந்த பதிவைக்காட்டி நான் எழுதும் இந்த தளத்தை கொச்சைப்படுத்தி அலுவல் பார்த்த வண்ணம் இருக்கின்றனர். இவற்றை மனதில் கொண்டே இப் பதிவின் முன் பகுதியில் குறிப்பிட்டபடி கழகத்தலைவர் சித்தார்த்தர் அவர்களுடன் உரையாடியிருந்தேன். இந்த நேரங்களில்தான் லண்டனிலிருந்து நெருப்பு இணையதளத்திற்கு அனோமதேய பெயருடன் என்னையும் இப்பதிவையும் நான் எழுதும் தளத்தையும் கொச்சைப்படுத்தி ஒரு ஆக்கம் அனுப்பியிருந்தனர். அதில் அரசியலை அரசியலாக முகம் கொடுக்கத் தெரியாதவர்கள் 'வீட்டில் றொட்டி சுட்டுக் கொண்டிருந்த ஜென்னியை' எனக் குறிப்பிட்டு எழுதியிந்தனர். இதனை நெருப்பும் வெளியிட்டிருந்தது. இதனை கருத்திற்கொண்டுதான் இந்த வரிகளை குறிப்பிட்டுள்ளேன். தயவு செய்து உங்களைப் போன்றோர் (நெருப்பு தளத்தை வாசிக்காத நிலையில்) மனம் வருந்த நான் காரணமானதற்கு மன்னிக்கவும். மற்றும்படி நான் என்னை ஒரு பெண்ணாக நினைப்பதை விட ஒரு மனிதம் உள்ளவராகவே பார்க்கின்றேன். பெண் என்ற பாலை வைத்து என்னை உயர்த்தவோ அன்றி தாழ்த்தி பிற்பட்டவர் வரிசையில் இனம் காட்டவோ முற்படவில்லை. அதுவும் இந்த புலம் பெயர் சூழலில் செயற்படும் இந்த பெண்கள் சந்திப்பு வட்டத்துடன் என்னை இணைக்காதீர்கள். நான் என்றும் சமூகத்திற்குள் உள்ள முரண்பாடுகளை பிரித்து தனித்து கையாளவோ தீர்வு தேடவோ ஆன கருத்தை கொண்டிருக்கவில்லை. நான் பெண்விடுதலை என்று கூறிக்கொண்டு எந்த ஆண்களையும் எதிரியாகவோ அல்லது அவர்களை ஒரு வர்க்கமாகவோ பார்த்து எமக்கு பொதுவிலுள்ள அரசியல் சமுக பிரச்சனைகளை கூறுபோட விரும்பவில்லை அப்படி இதுவரை நான் செயற்பட்டதுவுமில்லை இவ்வாறான எனது பெண்விடுதலை ஆக்கங்களை முன்பே தேசம் தளத்தில் கொண்டுவந்திருக்கின்றேன். முடிந்தால் பழைய ஆக்கங்களிற்கூடாக தேடிப்பார்க்கவும். அப்பொழுது என் பெண்நிலைப்பாடு உங்களுக்கு புரியும். மேலும் பெண்விடுதலை சம்பந்தமான உங்கள் கோடிட்டலுக்கு மீண்டும் பல நன்றிகள் .

10. j.jenney on February 28, 2011 11:15 pm

வின்சென்ற்!
நான் தேசம் தளத்தில்முன்பே -திருமலையில் நடந்த சிறுமி வர்சா படுகொலை, திருகோணமலை ஐயர் ஒருவரின் படுகொலை, விடிந்த கிழக்கின் படுகொலைகள்

விசேடமாக பெண்களின் அவலங்கள் கொலைகள் என சில கட்டுரைகள் எழுதியுள்ளேன். அவை சர்வதேச குற்றவியல் அவைக்கு போகும் விதத்தில் ஒரு ஆங்கில ஊடகத்தினூடு வெளியிடப்பட்டு பிரசுரமாகியிருந்தது. இதனால் நான் பட்ட மிரட்டல்கள், துன்பங்கள் மறக்கமுடியாது. அதற்காக அல்லது வேறுசில இணையதளங்களில் கொச்சைப்படுத்தப்படுதல்களுக்கு நான் என்றும் பயந்தவள் அல்ல. காலம் கடந்தாலும் நீண்ட கால எனது தேடல்களின் நிமித்தம் நான் வெளிக்கொணர்ந்த இந்த கொலைகளை பல சாட்சிகளோடு வைத்துள்ளேன். பலியானவர்களின் பெருமூச்சு காலத்தை வென்றாலும் பலிகொண்டவர்களை காட்டி நிற்கும். எனவே கருத்தையோ எந்த உண்மைகளையுமோ சிதைக்க விடாமல் வெளிக்கொணருங்கள். நன்றிகள்

11. j.jenney on February 28, 2011 11:55 pm

"ஜென்னி, நீங்கள் நிலா என்ற பெயரில் எழுதிய "நினைவுப் பதிவுகளில் இருந்து - தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தோற்றம்! - கழக வாரலாற்றுக் குறிப்பு : நிலா (முன்னாள் கழகப் போராளி)" வரலாற்று குறிப்புக்கும் ; தற்போது உண்மை பெயரோடு நீங்கள் ஜென்னி என எழுதும் "தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் எனது சாட்சியம்" எனும் பதிவுகளுக்கும் இடையே ஏகப்பட்ட முரண்பாடுகள் தெரிகின்றன".

அஜீவன்!
உங்கள் ஆரோக்கியமான சந்தேகங்களுக்கு நன்றி!
நிலா என்ற நிலையில் காந்தீயம் என்ற மக்கள் அமைப்பினூடாக படிமுறை வளர்ச்சிப்போக்கில் கழகம் வளர்ந்த விதத்தை குறிப்பிட்டுள்ளேன். இதில் சந்ததிஅண்ணா, ராஜன் ஆகியோரின் பாத்திரம் மட்டுமல்ல இன்றும் வவுனியாவில் வாழ்ந்து கொண்டிருக்கும் காந்திய தொண்டர்கள் கழகமாகவும் கழகம் இல்லாமலுமாக செயற்படுகின்றனர். இதையும் பல இடத்தில் விபரமாக குறிப்பிட்டிருந்தேன். இவர்கள் சிலருடன் எனக்கு இன்றும் சில பொது வேலை சம்பந்தமாக தொடர்புகள் உள்ளது. இந்த நிலா என்ற பதிவுக்கு பின்னால் கூட பல வரலாறுகள் பதியப்படவுள்ளது. அதாவது இந்த காந்தீய வேலைத்திட்டம் பாலர் பாடசாலை- பண்ணைகள் என்ற வேலைத்திட்டத்தில் இன்று நாம் பறிகொடுத்துக்கொண்டிருக்கும் வடகிழக்கு மாகாணம் அத்தனையிலும் ஒரு வலைப்பின்னல் வேலைகளாக சிறப்பாக இயங்கியுள்ளது. இதில் நானும் ஒரு பங்காளராக இருந்தமையால் எனக்கும் நீண்டகால கனவாக இதை வெளிக்கொணர ஆவல் உள்ளது. அதற்கான எனது மாவட்ட குறிப்புக்கள் உட்பட ஏனையவையும் உள்ளது பலரின் தொடர்பும் உள்ளது."பூனைக்கு யார் மணி கட்டுவது" என்பது போல் நானாவது தொடங்கினால் மற்றவர்களும் இத்தளத்தில் குதிப்பார்கள் என்ற தைரியம் இப்பொழுது உள்ளது.
மேலும்ஜென்னி என்ற இந்த கழக பதிவில் நான் பின்தளத்திற்கு போனஒருவாரத்தில் ஒரத்தநாடு ராமசாமி குடும்பத்தினரோடு நின்ற ஓரிரு நாளில் பக்கத்து வீட்டிலிருந்த ராஜன் அவர்களை ஒருதடவையே நேரே சந்தித்தேன் அதுவும் நின்று பேசக் கூட தேவைவராத காலம் அது. எனவே ராஜனின் பாத்திரம் எனது எந்த கழக வேலையிலும் சம்பந்தமாக இருக்கவில்லை. பின்னால் ராஜன் அவர்கள் பிரிந்து போகும்போதும் அதில் எனக்கு எந்த உடன்பாடும் இல்லை எந்த தொடர்பும் இல்லை (இவை பற்றி எனது பதிவின் கடைசிப்பாகத்தில் விபரம் உள்ளது) மேலும் தளத்திலும் எனது அரசியல் வேலைத்திட்டங்கள் -அமைப்பு வடிவங்களில் ராஜன் அவர்களுக்கு எந்த சம்பந்தமும் இல்லை. பின் கழகத்தில் கடைசிப்பெண்ணாக இருந்த 1987 வரை நான் ராஜனைக் காணவில்லை. எனவே இந்தப் பகுதியில் எங்கே நீங்கள் ராஜன் அவர்களை தேடிப்பிடிக்கப் போகின்றீர்கள். நான் பதிவது "கழகத்தில் எனது சாட்சியம்" ஆயினும் கடைசிப்பகுதியில் நீங்கள் தேடும் விடயங்கள் வரும் சிறிது காத்திருங்கள்.

12. Natchthran Chev-Inthian on March 1, 2011 7:39 am

ஜெ.ஜென்னி
மிகமுக்கியமான வரலாற்றுக்கடமையை அகிலன் செல்வன் கொலைகளின் உண்மையான சூத்திரதாரிகளை அம்பலப்படுத்தியதன் மூலம் நீங்கள் செய்துள்ளீர்கள். இக்கொலைகளைப்பற்றி முன்னர் ராஜன் கூல் மற்றும் நான் எழுதியிருந்த போதும் உங்களுடைய சாட்சியம் உள்ளிருந்து வருவதால் மிக வலுவானதும் மிக நம்பகரமானதும் ஆக இருக்கிறது. மிக மெச்சத்தக்க பணி உங்களுடையது. பாராட்டுக்கள். வின்சன்ற் கேட்டுக்கொண்டபடி ஆங்கிலத்தில் இது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

மொழிபெயர்க்கப்படுவது அவசியம். சிவராம் அமெரிக்க தரகு பேராசிரியரைக் கொண்டு எழுதிவித்த தனது " லேணிங் பொலிற்றிக்ஸ் புறம் சிவராம்" வாழ்க்கை வரலாற்றில் இக்கொலைகளை தான் செய்யவில்லை என்று திரித்து கதை புனைந்துள்ளார். அதனால்தான் உங்களுடைய எழுத்து ஆங்கிலத்தில் வரவேண்டும்.

-நட்சத்திரன் செவ்விந்தியன்.

13. kanesan on March 1, 2011 9:35 am

செல்வன் அகிலன் படுகொலையில் சிவராமின் பங்கு குறித்து அன்றே கழகத்தினுள் பேசப்பட்டது. தள மாநாட்டிலும் இவ்விடயம் எடுக்கப்பட்டாலும் அவ்விடயம் அங்கு ஈஸ்வரன் சிவராம் பிரசாத் என்போரால் அமுக்கப்பட்டது.

சிவராம் யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலைக்குப் போகும் போது முல்லைத்தீவில் பிரசாத் வீட்டில் தங்கி நின்றே சென்றிருக்கிறார். அப்போது பிரசாத் முல்லைத்தீவு மாவட்ட அரசியல் பொறுப்பாளர். ஈஸ்வரன் கொடுத்த கடிதத்தை சிவராம் பிரசாத்துக்கும் காட்டி இருக்கிறார். அதன் பின் அவர் திருமலை சென்றதும் செல்வன் அகிலன் படுகொலை செய்யப்பட்டதும் நடந்தது.

சிவராம் எப்போதும் கூறி வந்த நியாயப்பாடு இது எனது தனிப்பட்ட முடிவல்ல.கழகத்தின் கொமிட்டி தீர்மானித்தது. ஈஸ்வரனுக்கும் பிரசாத்துக்கும் கூட இது பற்றி நன்கு தெரியும். அந்தக் கடிதத்தைக் கொண்டு போய் கொடுத்தது மட்டுமே நான் செய்தது என்பது தான்.

ஆனால் இது முன்னரே திட்டமிடப்பட்டது என்பதும் சிவராம் சாதுரியமாக இதனைக் கையாண்டார் என்பதும் தான் உண்மை.

ஈஸ்வரனுடைய ஆசைக்கு சிவராம் எண்ணெய் ஊற்றினார். பிரசாத்தை சாட்சிக்கு வைத்துக் கொண்டார்.

ஆனால் பின்னாட்களில் ஈஸ்வரன் பிரசாத் சிவராம் போன்றவர்கள் எல்லாம் எவ்வாறு ஜனநாயகப் போராளிகள் ஆனார்கள் என்பது தான் ஆச்சரியமாக இருக்கிறது.

ஈஸ்வரன் இப்போது உயிருடன் இல்லை. அது போல் சிவராமும் இல்லை. ஆனால் பிரசாத் லண்டனில் இருக்கிறார் என நினைக்கிறேன். அவராவது வாய்திறந்து உண்மை பேசுவாரா?

14. அமுதன் on March 2, 2011 4:31 pm

ஜென்னி நலமா நலமறிய ஆவல். என்னை உங்களுக்கு நன்றாகத் தெரியும். எனக்கும் உங்களை நன்றாகத் தெரியும். ஆனால்; எனது இயக்கப் பெயர் உங்களுக்கு ஞாபகம் இருக்க மாட்டாது. காலம் வரும் போது எனது சொந்தப்பெயரைக் குறிப்பிடுகிறேன்.

இங்கு கழகத்தின் கடந்தகாலம் பற்றி துணிந்து எழுத வந்தமைக்கும் உங்கள் முயற்சிக்கும் பாராட்டுக்கள். பணி தொடரட்டும். அதே வேளை உங்கள் குறித்து என்னிடம் உள்ள விமர்சனங்களையும் கேள்விகளையும் இங்கு தொடுப்பதனை நீங்கள் புரிந்து கொள்வீர்கள் எள நம்புகிறேன்.

கழகத்தின் உட்கொலை மற்றும் சித்திரவதைகள் மீதான விமர்சனங்களை நாங்கள் அப்போது முன்வைத்த போது நீங்கள் அன்பாக அழைக்கும் பெரியவர்> பெரியஜயா> பெரிசு என்ற தலைவர் உமாமகேஸ்வரன் என்ற முகுந்தனின் அதி உச்ச நம்பிக்கைக்கு உரியவராக இருந்தீர்கள். செல்வன் அகிலன் கொலை மற்றும் சுழிபுரம் கொலை உள்ளிட்ட கொலைகளை மூடி மறைப்பதிலும் அவற்றிற்கு அரசியல் விளக்கங்கள்> கொடுப்பதிலும் சாயம் பூசுவதிலும்> முக்கியமாக இருந்தவர்களில் உங்கள் பாத்திரம் என்ன என்பதனை நீங்கள் மறந்திருக்கலாம். நாங்கள் மறக்கவில்லை.

நீங்கள் சீ90 நீல நிற பிறான்ட் நியூ கொண்டா மோட்டார் சைக்கிளில் வரும் போது ஆ! முகுந்தன்ர ஸ்பை (உளவாளி) வருகிறது என்றுதான் நாங்கள் கூறிவிட்டு அமைதியாகிவிடுவோம்.

நேசன் வெளியேறிய போது நீங்களும் சின்ன மெண்டிசும் அதே மனநிலையில்தான் இருந்ததாக கூறினீர்கள். தயவு செய்து சின்ன மெண்டிசுடன் உங்களை ஒப்பிடாதீர்கள். சின்ன மெண்டிஸிடம் இருந்த நேர்மை எமது கழகத்தின் மாக்ஸிஸ> லெனினிஸ> மாவோயிஸ சித்ததாந்தங்களை மனப்பாடம் செய்து வைத்திருந்த அரசில் ஜாம்பவான்களிடம் இருக்கவில்லை. அவனிடம் நேர்மை இருந்தது. நான் பெரியவரை தலைவரை முகுந்தனை நேசிக்கிறேன். அவருக்கு விசுவாசமாகவே இருப்பேன் என வெளிப்படையாகவே சொல்லுவான். அதன்படியே இறுதிவரை தான் நேசித்த இயக்கம் கொள்கை தனது பொறுப்பில் இருந்த ஆயதம் ஏந்திய போராளிகள் என்பவர்களுக்காக தனி ஒருவனாக நின்று புலிகளிடம் அகப்பட்டு சொல்லமுடியாத சித்திரவதைகளைத் தாங்கி மண்ணிலேயே உயிர் நீத்தான். கழகத்தின் அனைத்து தரப்பினருமே புலிகளுக்குப் பயந்து துண்டைக் காணோம் துணியைக் காணோம் என்று ஓட இறுதிவரை நின்று தன்னுடன் நின்றவர்களை பாதுகாப்பாக வேறு இடங்களுக்கு அனுப்பி விட்டு அவனுடன் நெருக்கமாக இருந்த வளவன் என்ற நம்பிக்கைத் துரோகியால் காட்டிக் கொடுக்கப்பட்டு கிட்டு - சத்தியா குழுவிடம் அகப்பட்டு அணு அணுவாக சித்திரைவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டான்.

ஆனால் நீங்கள் எல்லாம் அப்படி அல்ல உட்கட்சி மோதலில் ஈடுபடுபவர்களைக் கண்டால் அவர்களுக்கு சார்பாக இருப்பது போல் நடிப்பீர்கள்> பின் முகுந்தனுக்கும் அவரது செயற்பாடுகளுக்கும் முண்டு கொடுத்த> விழ விழ து}க்கி நிமித்தி வைத்திருந்தவர்களுள் மிக முக்கியமானவராக இருந்தீர்கள்.

நேசன் விலகியபோது அவரது மனோ நிலையில்;தான் நீங்கள் இருந்தனீர்கள் என்றால் விபுலுக்கு திருநெல்வேலியில் வைத்து கழகத்தின் ஆயுதப்பிரிவினர் அடித்து மண்டை உடைத்த போது யாழ்ப்பாணத்தில் தானே நின்றீர்கள். நீங்களும் மத்திய குழு உறுப்பினர் தானே? கழகத்தில் இருந்து விலகிச் சென்று தலைமறைவாகி இருந்த தீப்பொறியினரை குறிப்பாக நேசன்> விபுல்> மது> அமீன்> பாண்டி> விஜயன்> இன்னும் சிலரது பெயர் ஞாபகத்திற்கு வரவில்லை இவர்களை இரவு பகலாக தேடியவர்களுள் நீங்களும் ஒருவர் என்பதனை நீங்கள் மறக்கலாம். நாங்கள்மறக்கவில்லை.

இந்த முரண்பாடுகள் அதிகரித்து சென்ற வேளை ஒருவரை ஒருவர் நம்ப முடியாத வேளை குப்பிளானில் இருந்து நடு நிசியில் நீங்கள் புறப்பட முற்பட்ட போது உங்களுக்கு துணையாக என்னை அனுப்பி வைத்தார்கள். நீங்கள் மறந்திருப்பிரீகள் நாங்கள் மறக்கவில்லை.

சரி கழகத்தின் தோழி ரீட்டா மீது தீபொறித் தோழர்கள் ( கழகத்தில் இருந்து வெளியேயவர்கள்) பாலியல் வன்முறையை புரிந்து விட்டார்கள் என ஒரு நாடகம் அரங்கேற்றப்பட்டதே. அதன் பிரதான பாத்திரத்தை நீங்கள் தானே வகித்திருந்தீர்கள்? மறந்து விட்டீர்களா? கழகத்தில் இருந்து அப்போது வெளியேறிய யாழ் மாவட்ட தோழர்கள் குறித்து அனைவருக்கும் நல்ல அபிப்பிராயம் இருந்ததனால் அதனை உடைக்க இப்படி ஒரு நாடகத்தை அரங்கேற்றினீர்களே? ஞாபகம் இல்லையா?

சரி கழகத்தில் பின் தளத்தில் நடைபெற்ற கொலைகள்> தளத்தில் இடம்பெற்ற கொலைகள்> சுழிபுரம் கொலைகள் என எக்கச்சக்க கொலைகளின் போது கழகத்தின் மகளிரணித் தலைவியாக இருந்த நீங்கள் தியானத்தில் இருந்தீர்கள் அல்லது ஒன்றுமே தெரியாத பபாவாக இருந்தீர்கள் என்று வைத்துக் கொள்வோம்.

இவற்றையெல்லாம் பற்றி ஆராய்ந்து சுயவிமர்சனம் செய்து மீள எழுவதற்கு கூட்டப்பட்ட தள மகாநாட்டை பகிஸ்கரித்த மாணிக்கதாஸன் குழுவினர் மன்னார் நடேஸனுடன் இணைந்து> கந்தரோடையில் மகாநாடு நடைபெற்றுக் கொண்டு இருக்கும் போதே மன்னாரில் கழகத் தோழரை போட்டுத் தள்ளினார்களே அதனை அறிந்து நாங்கள் ஆத்திரம் கொண்ட போது மகாநாட்டில் பிரயோசனம் இல்லை எனக் கூறி குழம்பிய போது அதனையும் பூசி மெழுகி மாணிக்கதாஸன் தரப்பை நியாயப்படுத்தியதனை நீங்கள் மறக்கலாம் நாங்கள் மறக்கவில்லை.

இங்கே நீங்கள் கூறிய எஸ்.ஆர் என்ற சிவராம் குறித்து கழகத்தில் இருந்து வெளியேறிய தோழர்கள் (பின்னர் தீப்பொறியானவர்கள); உள்ளிட்ட பெரும்பாலானவர்களுக்கு அன்று கடுமையான விமர்சனம் இருந்தது. ஆனால் அன்று

கழகத்தில் பாசறை அல்லது அரசியல் வகுப்புக்கள் எடுப்பதற்கு என்று இறக்குமதி செய்த எஸ். ஆர்> அவரது அன்றைய இணைபிரியா நண்பர் பிரசாத்> முத்து போன்ற சித்தாந்தவாதிகளை நீங்களும் ஏற்றுக் கொண்டுதானே மகளிருக்கும் வகுப்பு எடுக்க அனுமதித்தீர்கள்.

உங்களுக்கு தெரியாதா? சிவராம் திருமலை போக முன்பு முல்லைதீவு சென்று பிரசாத்தைச் சந்தித்து தான் புரிய இருந்த சாகசத்தை கூறிச் சென்றதும்> பின்பு அந்த சாகசம் முடிந்த பின்பும் பிரசாத்திற்கு கூறியதும் தெரியாதா? சிவராமிற்கு கடிதம் கொடுத்த ஈஸ்வரன் பிரசாத்தினதும் நெருங்கிய நண்பன். ஆனால் இப்போ உங்களைப் போல் பிரசாத்தும் சொல்லுவார் செல்வன் அகிலன் கொலை குறித்து எனக்கும் விமர்சனம் இருந்தது என்று.

செல்வனோ அகிலனோ எனக்கு ஞாபகம் இல்லை இவர்களில் ஒருவரது காதலியாக இருந்தவரும் எமது கழகத் தோழி. அழகானவர். துடிதுடிப்பானவர். கழகத்திற்காக கடுமையாக உழைத்தவர்.

கழகத்தின் சித்திரவதைகூட இளவரசன் கந்தசாமியின் மருமகன் வெங்கட்டுடன்தான் ஏஸ். ஆர் எஸ்.எம்.ஜியுடன் திருமலைக்கு அனுப்பப்பட்டவர். இவர்களுடன் தான் பீ.எல்.ஓ. மாமா இணைந்தார். இவர்கள் மூவரும்தான் செல்வன் அகிலனை போட்டவர்கள். அதன் பின் அந்தத் தோழியுடன் சிவராம்; தவறாக நடக்க முற்பட்டதாக தகவல் வந்தது. அவரை தனது காதலியாக்க எஸ்ஆர் என்ற சிவராம் முயன்றதாகவும் ஒரு தகவல். ஆனால் அதனை என்னால் உறுதிப்படுத்த முடியவில்லை. தயவு செய்து அந்த தோழியின் உண்மைப் பெயரை இந்த தளத்தில் யாரும் குறிப்பிட்டு விட வேண்டாம். அவர் திருமணம் முடித்து புலம்பெயர்ந்து வாழ்கிறார். அவருக்கு தொடர்ச்சியாக விசாரணை என்ற பெயரில் பல அழுத்தங்களை கொடுத்தார்கள் அவர் தலைமறைவாகத் திரிந்தார். அப்போது அந்தத் தோழியின் பாதுகாப்பு பற்றி நீங்கள் மகளிர் அணித் தலைவியாக இருந்தவர் என்ற வகையில் என்ன செய்து கிழித்தீர்கள். கழகத்தின் ஏனைய தோழர்கள்தான் அவரைப் பாதுகாத்தார்கள். கழகத்தை விமர்சித்தவர்கள் அதில் இருந்து வெளியேறியவர்கள் அனைவரையும் எதிரிகளாகத் தானே பார்த்தீர்கள்.

அது சரி பீ.எல். ஓ மாமாவும் இந்தக் கொலையில் சம்பந்தம் என இந்தக் கட்டுரையை எழுதும் போதுதான் புலனாய்வு செய்து பிடித்தீர்களோ? நீங்கள் ஈ.என்.டீ.எல்எவ் இன் து} ணாக பரந்தன் ராஜனுடன் இருக்கும் போது மாமாவும் ராஜனின் வலது கரமாக இருந்தவர். அப்படியாயின் எப்படி கொலைகாரரை பக்கத்தில் வைத்து இருந்தீர்கள். நீங்கள் அண்ணன் என்று அன்பாக மரியாதையுடன் அழைக்கும் பரந்தன் ராஜனிடம் சொல்லி விலக்கி வைத்திருக்கலாமே? ஏன் அதனைச் செய்யவில்லை?

அன்றும் சரி இன்றும் சரி உங்களிடம் இரண்டு முகங்கள் இரண்டு பக்கங்கள் உண்டு என்பதனை மறைக்க முற்படாதீர்கள்.

ஏன் செல்வன் அகிலன் கொலை உள்ளிட்ட பல பிரச்சனைகள் பேசப்பட்ட உரும்பிராய் கூட்டம் ஒன்றில் கடுமையான வாதப் பிரதி வாதங்கள் போனபோது சின்ன மெண்டிஸ் ஏன்டா என்மீதும் ஆயுதம் ஏந்தியவர்கள் மீதும் மட்டுமே குறை கூறுகிறீர்கள்? விமர்சனம் செய்கிறீர்கள். ஈஸ்வரன்தானே எஸ்.ஆரிடம் கடிதம் கொடுத்தது. கிழக்கு மாகாணப் பொறுப்பாளர் என்ற வகையில் மத்திய குழு உறுப்பினர் என்ற வகையில் ஆயுதமும் நம்பிக்கையான ஒருவரையும் தாருங்கள் எனக் கேட்டதற்கு அமையவே என்னால் வெங்கட் அனுப்பி வைக்கப்பட்டார் எனக் கூறியவுடன் ஈஸ்வரன் திருதிருவென்று முழித்து விடயத்தை சமாளித்தார். தான் அப்படிக் குறிப்பிடவில்லை அவர்களைக் கூட்டிவா என்று தான் கடிதம் கொடுத்தேன் என்றார். (குறிப்பு – அன்றைய காலப் பகுதியில் புளொட்டில் அரசியல் பிரிவு இராணுவப் பிரிவு என இருந்த இரண்டு பிரிவுகளும் கடுமையான முரண்பாட்டுடன் இயங்கியமை குறிப்பிடத்தக்கது)

உண்மையில் அன்று மெண்டிசுடன் இயங்கிய பலர் தளத்திற்கு அனுப்பப்பட்ட முதலாவது குழுவில் சந்ததியார்> தங்கராஜா வாத்தி >ஜான்மாஸ்ரர் உள்ளிட்ட பலரிடம் அரசியல் வகுப்புகளை பெற்ற அதே வேளை ஆயுத மோதல்களில் தேர்ச்சி பெற்ற டில்லி பயிற்சி பெற்ற பலர் இருந்தார்கள். அவர்களில் பலர் மெண்டிஸ் உட்பட

எனக்கு நெருக்கமானவர்கள். அவர்களிடம் தனிப்பட பேசும் போது சொல்வார்கள் தளத்தில் மத்திய குழுவில் இருந்தவர்களும் அரசியல் பிரிவில் உயர் மட்டங்களில் இருந்தவர்களும் நேர்மையற்றவர்கள். ஒருவருக்கு ஒருவர் குழி பறிப்பவர்கள். இவர்களை நம்பி நாம் பெரியவருடன் முரண்பட்டு முடிவு எடுக்க முடியாது. இவர்கள் பேசும் சித்தாந்தத்திற்கும் நடைமுறைக்கும் சம்பந்தம் இல்லை. நாங்கள் அதிகம் பேசமாட்டோம் ஆனால் பேசுவதைச் செய்வோம் என்றார்கள்.

உண்மைதான் அன்று தளத்தில் இருந்த நீங்கள் (ஜென்னி) அசோக்> குமரன் என்ற மாதகல் பொன்னுத்துரை> வவுனியா முரளி> ஈஸ்வரன்> கேசவன் என்ற டொமினிக்> மற்றும் மாவட்டங்களில் அரசியல் பொறுப்பாளர்களாக இருந்தவர்கள் குழுவாதம்> போட்டி> குழிபறிப்பு சொல்வதொன்று செய்வதொன்று என்று இருக்காமல் சரியாக கழகத் தோழர்களை வழி நடத்தி இருந்தால் மெண்டிஸ் தலைமையிலான ஆயுதம் தரித்த தோழர்களும் பின்தளத் தொடர்பை துண்டித்து ஒன்றாக செயற்பட்டு இருப்பார்கள். ஆனால் அவர்கள் உங்களை நம்பவில்லை.

புலிகளின் அழிவிற்குப் பின் பலர் வரலாறுகளையும்> காப்பியங்களையும் எழுதத் தொடங்கியிருக்கிறார்கள். கடந்தகால வரலாறுகள் வெளிவரவேண்டும் அப்போதுதான் எதிர்காலம் பற்றிய தெழிவான சிந்தனை செயற்பாடுகள் ஆக்கபூர்வமானதாக அமையும்.

ஆனால் தாங்கள் எழுதுகின்ற வரலாறுகளில் தன்பற்றிய சரியான சுயவிமர்சனங்கள் ஒழிவுமறைவின்றி எழுதப்பட வேண்டும். அதனை விடுத்து வரலாற்றை எழுதுபவர்கள் தனது பக்க அழுக்குகளுக்கு வெள்ளை அடித்து எழுத முற்படும் போதுதான் வில்லங்கம் வேண்டாம் ஆளை விடுங்கள் என்று பேசாமல் இருக்கும் எம் போன்றவர்களுக்கு ரத்தம் கொதிச்சு எழுத வேண்டிய நிலை ஏற்படுகிறது.

இனித் தொடர்ந்து எழுத உண்மையில் எனக்கு நேரம் இல்லை அப்பப்ப வருவன் இன்னும் இருக்கு தேவைப்படும் போது கொஞ்சம் கொஞ்சம் விடுவன்.

15. Ajeevan on March 2, 2011 6:41 pm

//அமுதன் - சுயவிமர்சனங்கள் ஒழிவுமறைவின்றி எழுதப்பட வேண்டும். அதனை விடுத்து வரலாற்றை எழுதுபவர்கள் தனது பக்க அழுக்குகளுக்கு வெள்ளை அடித்து எழுத முற்படும் போதுதான் ………… //

உண்மைகள் மறை(ற)ந்து விட்டதாக நினைக்கலாம். இல்லை ஒரு போதும் இல்லை. காலம் கடந்தாவது வெளிவந்தே ஆகும். நன்றி அமுதன்.

//நீங்கள் குறிப்பிடும் சிவராம் இந்த 'so called' பத்திரிக்கையாளர் சிவராமா? அசோக் என்று குறிப்பிடப்படுபவர் பரிசில் தற்போது வசிப்பவரா? - naan//

உங்கள் அனுமானம் சரி. மேலே பலரால் சிவராம் (தராக்கி) என எழுதப்படும் மனிதருக்குத்தான் புலிகள் மாமனிதர் கௌரவம் அளித்தனர். இவர் செய்த விளையாட்டுகள் மிக விபரீதமானவை.

16. பல்லி on March 2, 2011 10:08 pm

அமுதன் உங்கள் நலம் கண்டு மிக்க மகிழ்ச்சி;

உங்கள் எழுத்தில் இருந்து நீங்கள் ஒரு நெருப்புதான் (தீபொறி) என இலகுவாக யாவரும் புரிந்து கொள்ள முடியும், என்னடா இது ஜென்னியை கிளற பல்லி வருவது என நீங்கள் வருத்தபடலாம்;

ஒன்று ஜென்னி மீது நீங்கள் சொன்ன அத்தனை குற்றசாட்டுகள் இருந்தாலும் அதை கேக்கும் அல்லது சொல்லும் தகுதி மக்களுக்கும் சக போராளிகளுக்கும்தான் உண்டு, தீப்பொறிக்கு கிடையாது, தாம் மட்டும் தப்பினால் போதும் என ஓடிய தீப்பொறி அதை நியாயபடுத்த கடன் வாங்கி ஒரு புத்தகமும் மிச்சத்தில் ஒரு தனிநபரான கிட்டனுக்கு கல்லும்தான் செய்தார்கள்; இதுவரை தீப்பொறி விலகலுக்கு எங்குமே விக்கல் எடுக்கவில்லை, ரயாகரனிடம் கடன் வாங்கிதான் (தகவல் தமிழரங்கம்) புதியதோர்

உலகம் அமைத்தார்கள்; அதே மனிதனுக்கு கூட தெரியாது கிட்டனுக்கு கல் எறிந்த கதை,

நான் பல தடவை தேசத்தில் ரீட்டா பற்றி எழுதினேன் அப்போதெல்லாம் அமைதி காத்த தீப்பொறி + அமுதன் இப்போ தீப்பொறி சுக்குநூறாய் நெருக்கி போய் இருக்கும் போது ஜென்னியின் கட்டுரைக்கு கதைசொல்லி தீப்பொறி சிறந்தது என புருடா விட வருகிறார், கட்டுபாடே இல்லாத தீப்பொறியில் கட்டுபாட்டு குழு கூடிதானாம் கிட்டனுக்கு கல் எரிந்தார்கள்?? இதை சொல்ல உங்களுக்கு வெக்கமாய் இல்லை?? இதில் கழகத்துக்காய் கிழித்தார்களாம்;

பல தடவை சொல்லி விட்டேன் சந்ததி கொலைக்கு தீப்பொறியின் அடங்காதனமே காரனம்,

கண்ணாடி சந்திரன் சொல்லுகிறார் வாத்தியுடன் முரன்பட்டதால் அவர் தன்னை போட வந்தார் என்று,

ஆக 16 பேர் கொண்ட தீப்பொறியில் கருத்து முரன்பாடு வந்திச்சுதாம்; போட போனார்களாம்; ஆனால் கழகத்தில் பல ஆயிரம் பேர் இருக்கும் போது இவர்கள் கருத்து முரன்பாடே இல்லாமல் ஓட்டம் காட்டுவார்களாம் முகுந்தன் கலைப்பாராம் யாருக்கு பாட்டி அப்பம் சுட்ட கதை சொல்லுறியள்?? முடிந்தால் சந்ததி அல்லது வாத்தி ஏன் கழகத்தை விட்டு விலகினார் என சொல்லி விட்டு பின்பு தீப்பொறி பற்றி பாடம் எடுக்கலாமே?? மூன்றாம் வகுப்பு பிள்ளைகள் போல் மூவர் வந்து தளங்களில் வாந்தி எடுத்த பின்புமா கவரிமான் வேஸம்,, ??

ரீட்டா விடயத்தை தளத்துக்கு கொண்டு வந்தது பல்லியே அதை பலதடவை கேட்டு விட்டேன், இடையில் ரகு மிரட்டினார் ரீட்டாவின் நம்மர் வேண்டுமா என?? ஆனால் இதுவரை அதை யாரும் ஒரு பிரச்சனையாக எடுக்கவில்லை, அமுதன் நீங்கள் எத்தனை முகம் கொண்டு வந்தாலும் தீப்பொறி டமார் டமார், ஜென்னி விமர்சனத்துக்கு உள்ளவர் என்பதை பலர் போல் பல்லியும் சொல்லியுள்ளேன், ஆனால் பலரது முகத்தை அவரது எழுத்து வெளி கொணருவதால் அவரது ஆக்கம் அனைத்தும் வரட்டும் கண்டிப்பாக விமர்சிப்போம்;

அமுதம் வாத்தியையும் கண்ணாடியையும் தேசத்தில் நேரடியாக வாதம் செய்ய சொல்லுங்கள், அன்றய கழகம் புனிதமாகி விடும்; நாத்தம் இவர்களுடன் வந்து விடும், ஜென்னியின் வருகை பலரை கலங்க வைக்கிறது என அன்றே பல்லி சொன்னேன்; அதுக்கு ஒரு மைல் கல் அமுதனின் படபடப்பு அல்லது பரபரப்பு??

அமுதன் உங்கள் எழுத்தில் தீப்பொறியை காமாந்து செய்வதும் பழியை யாரோ சிலர் மீது போட துடிப்பதும் புரிகிறது?? ஆனால் இது 1985 அல்ல அல்ல இப்போ 2011 என்பதை தாங்கள் புரிந்து கொள்ள வேண்டும்;

ஆனாலும் தாங்கள் ஜென்னிமீது வைத்த அல்லது தந்த குற்றசாட்டுகளும் வாசகர்கள் கவனத்தில் கொள்வார்கள்;

17. Information on March 2, 2011 10:36 pm

சிவராம் தொடர்பாக அசோக் நட்சந்திரன் செவ்விந்தியன் ஆகியோர் தேசம் சஞ்சிகையில் எழுதிய பதிவுவை அருகில் உள்ள இணைப்பில் பார்க்கலாம்.

சிவராம் - 5வது ஆண்டு நினைவு: இலங்கையின் ஊடகத்துறையின் தற்போதைய நிலை
http://thesamnet.co.uk/?p=19945

18. kuru-velavan on March 3, 2011 10:13 am

தீப்பொறி அதை நியாயபடுத்த கடன் வாங்கி ஒரு புத்தகமும் மிச்சத்தில் ஒரு தனிநபரான கிட்டனுக்கு கல்லும்தான் செய்தார்கள்-பல்லி

அடப்பாவிகளா! அந்தப் பாவப்பட்ட (புண்ணியம் என்றும் சொல்லலாமோ) மிச்சம் என்னிடம் தான் வந்து சேந்துதோ? விடயம் வேறொன்றுமில்லை. 86 இன் பிற்பகுதியில் காசு கொஞ்சம் வாங்கிக் கொண்டு கல்லுகள் (எண்ணிக்கை 50 என ஞாபகம்) செய்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

கொடுத்தேன். நான் நல்லவனா? கெட்டவனா?

19. பல்லி on March 3, 2011 11:20 am

:://காசு கொஞ்சம் வாங்கிக் கொண்டு கல்லுகள் (எண்ணிக்கை 50 என ஞாபகம்) செய்து கொடுத்தேன். நான் நல்லவனா? கெட்டவனா?///

ஆக கல்லும் இரவல்தான் அதுகூட பாலஸ்தீனத்தில் குதிரை மேய்த்தும் செய்ய தெரியவில்லையோ?? குரு தாங்கள் நல்லவனோ கெட்டவனோ எனக்கு தெரியாது; ஆனால் விபரமான வியாபாரி என்பதில் சந்தேகமே இல்லை; அதுசரி கல்லு கொம்பனி வத்திருந்தீர்களா?? அல்லது கொம்பனி (இயக்கம்) எதிலும் இருந்தீர்களா?? காரனம் டெலோகாரர் கிலோவுக்கு விலை போட்டு வல்லரசு ஆயுதங்கள் விற்றதாய் கேள்வி; அதில் ஒன்றோ அல்லது அதை,,,,,,,,,,,,,,,,

Name (required)

Email (required)

Website

உங்கள் கருத்தை பகிர்ந்து கொள்ளுங்கள்
English பாமினி உச்சரிப்பு

அனுப்புக

வகைகள்.: லண்டன் குரல் (65) பார்

எழுதுபவர்கள்.: பாலச்சந்திரன் எஸ் (1) பார்

- பழயவை

  - March 2011 (22)
  - February 2011 (171)
  - January 2011 (191)
  - December 2010 (172)
  - November 2010 (259)
  - October 2010 (293)
  - September 2010 (293)
  - August 2010 (335)
  - July 2010 (328)
  - June 2010 (334)
  - May 2010 (284)
  - April 2010 (229)
  - March 2010 (239)
  - February 2010 (266)
  - January 2010 (222)
  - December 2009 (345)
  - November 2009 (342)